இதழ் - 12

மே - 2026


# கேலக்ஸியின் விண்மீன் மின்னிதழ்

நேர்காணல்

## "நாவலே உகந்த வடிவம்"

## எழுத்தாளர் சித்ரா சிவன்





நிஸ்வாவின் நிழலில்
குகையும், மலையும்!!!

ISBN 978-81-686259-9-0

www.galaxybs.com

GALAXY BOOK SELLERS & PUBLISHERS

விண்மீன்
மின்னிதழ்

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல
தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே
நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.
- நாலடியார்

ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது
- ஔவையார்

**பதிப்பாளர்**
பாலாஜி பாஸ்கரன்

**ஆசிரியர்**
பரிவை சே குமார்

**இணை ஆசிரியர்**
தேவதர்சினி நடராஜன்
இலக்கியா தவதுரைநாதன்

**வடிவமைப்பு**
சென் பாலன்
ஹரிபிரசாத்

**Published by**
Galaxy Book Sellers & Publishers

**Print Partners**
Printech, UAE

**Travel Partner**
FJ Tours & Travels, UAE

**Galaxy Book sellers & Publishers**
www.galaxybs.com
+91 99944 34432

GALAXY BOOK SELLERS & PUBLISHERS

ISBN 978-81-686259-9-0

# நிலைப்பாடு

'நிலைப்பாடு' என்பது மிகவும் முக்கியமான வார்த்தை. இது பொது அல்லது தனிப்பட்ட விஷயங்களில் அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது. இங்கே யாரும் யாரையும் ‘என்னோட நிலைப்பட்டைத்தான் நீ எடுத்தாகணும்‘ என வற்புறுத்த முடியாது என்றாலும் சமீப காலமாக வற்புறுத்தல்கள் என்று சொல்வதைவிட மிரட்டலே அதிகமாகிக் கொண்டிருக்கிறது.

குடும்பப் பிரச்சினைகளில் ஆளாளுக்கு ஒரு எண்ணம் இருக்கத்தான் செய்யும் என்பதை நாம் பார்த்துத்தான் வளர்ந்திருக்கிறோம், நம் தலைமுறை அன்று பார்வையாளனாகவும் இன்று அந்தப் பிரச்சினைகளில் முடிவெடுக்கும் நபராகவும் மாறியிருக்கிறது. அங்கே முயலுக்கு மூணு கால்ன்னு நிற்பவருக்கு எல்லாரும் சமரசம் வீசுவதில்லை, எது சரி எது தவறென்ற வாதங்களும் அதன் பின்னான தீர்வும் நிகழவே செய்யும். அதேபோல்தான் நடிகனை ரசிப்பது, அரசியல்வாதியை, அரசியல் கட்சியை விரும்பது, விரும்பியதைச் சாப்பிடுவது, விரும்பியதை வாசிப்பது என எல்லாவற்றிலும் அவரவர் முடிவுதான் முக்கியமே ஒழிய, அழுத்தங்கள் அல்ல.
இணையத்தின் பயன்பாடு அதிகமானபின் கடந்த சில வருடங்களாக நான் ஆதரிக்கும் கட்சியையும் தலைவரையும்தான் நீயும் ஆதரிக்க வேண்டும் என்ற மனநிலை பரவலாய் மாறியிருக்கிறது. அதுவும் இணையத்தில் ஆட்சி செய்கிறது. இது ஆரோக்கியமான சூழல் இல்லை. அவர்களின் தவறைச் சுட்டிக் காட்டினால் உடனே ஒரு வட்டத்துக்குள் கொண்டு போய் நிறுத்தி வைத்து அடிக்க நினைக்கும் மனநிலைக்கும் பைத்தியக்கார மனநிலைக்கும் வேறுபாடு என்பது துளி கூட இல்லை என்றே சொல்லலாம்.

இங்கே அவரவர நிலைப்பாடு அவரவருக்கு. இந்த நிலைப்பாட்டுத் திணிப்புத்தான் நட்புகளுக்குள் விரிசல் வரச் செய்கிறது என்பதை நாம் யாரும் உணர்வதில்லை. எனக்குத் தேவை என்றால் நான் எதையும் பேசுவேன் என்பதுதான் தற்போது பலரின் (மன)நிலை, இது மாறவேண்டும். அடுத்தவர் பேசுவது பிடிக்கவில்லை என்றால் ஒதுங்கிச் செல்லலாம். அதைவிடுத்து அவன் நண்பனாக இருந்தாலும் கேவலமாகப் பேசுவதையும் எழுதுவதையும் தவிர்த்தால் உறவு நீடிக்கும்.

என் நிலைப்பாடே உனக்கும் என்றில்லாமல் அவரவர் நிலைப்பாட்டில் இருக்க விடுவோமே..!

பரிவை சே குமார்

# இதழில்....




**சிறுகதைகள்...**

செரிப்ரம் - என். நாகராஜன்

கதை சொல்லப்போறேன் - அப்புசிவா

தொலைந்த சாவி - பாலமுருகன்.லோ

மீசைக்காரர் பங்களா - பிரியா ரஞ்சன்

**நேர்காணல்...**

"நாவலே உகந்த வடிவம்" - எழுத்தாளர் சித்ரா சிவன்

**கட்டுரை...**

சுவரின்றி சித்திரமா? - மீரா அகமது

**கட்டுரைத் தொடர்...**

நிஸ்வாவின் நிழலில் (பகுதி – 11) - இளங்கோ ராமசாமி

**புத்தகப்பார்வை...**

அஹிம்சை என்பது என்ன? - தமிழ்க்காதலன்

காதலுக்கு பிரபஞ்சம் ஒரு கைப்பிடி- நௌஷாத் கான்.லி


விண்மீன் மின்னிதழ்


**குறுநாவல்...**

வேர்களின் சாவி - கங்கா

**கவிதைகள்...**

காலாவதி - இரா. தங்கப்பாண்டியன்

விதிவிலக்கற்ற 24 - நன்னு

அச்சம்..! - பவானி சிம்ஹன்

உழைப்பு - ப்ரஸன்னா வெங்கடேஷ்

துணை - ப்ரஸன்னா வெங்கடேஷ்

**சினிமாப்பார்வை...**

நீளிரா - பரிவை சே.குமார்

# செரிப்ரம்

முனைவர் என். நாகராஜன்
கோயம்புத்தூர்

அந்த இரண்டு சம்பவங்கள் மட்டும் என் வாழ்க்கையில் நடைபெறாமலிருந்திருந்தால் இன்று நான் கூட ஒரு சராசரி மனிதனைப் போல், ஏன் அதற்கும் மேலாகவே வாழ்ந்து கொண்டிருப்பேன். இப்போதும் கூட, என்னுடன் படித்த சக மாணவர்களைப் பார்க்கும்போது அந்த எண்ணம் லேசாகத் தோன்றி மறையும். அவர்களைப் பேராசிரியர்களாகவோ, வங்கி மேலாளர்களாகவோ சந்திக்கும்போதும் சரி அல்லது அவர்கள் என்னை ஒரு விதக் கழிவிரக்கத்துடன் பார்க்கும்போதும் சரி, என் மனம் கூசும். இவ்வளவுக்கும் நான் படிப்பில் அவர்களை விட எவ்வளவோ மேல்; வகுப்பில் முதல் மாணவன் கூட... என்னுடைய வகுப்பு நண்பர்களெல்லாம் அவர்களின் தந்தைமார்களின் பிரதாபத்தால் எங்கள் ஆசிரியர்களை வசீகரித்தார்களென்றால் நான் மட்டும் என் சுய திறமையாலேயே அவர்களைத் திரும்பிப்பார்க்க வைத்தேன் என்றால் உங்களுக்கே கூட ஆச்சரியமாக இருக்கும்.

நான், ராதாகிருஷ்ணன், மயில்சாமி மூன்று பேரும் முதல் பெஞ்ச் மாணவர்கள். "என்ன, நீ செந்தூரரார் பையனா?" என்று ஒரு ஆசிரியர் ராதாகிருஷ்ணனைப் பார்த்து கேட்பார். இன்னொரு ஆசிரியர், “சார், நான் இவனை ஏரோபிளேன்னுதான் கூப்பிடுவேன்” என்பார். காரணம், அவன் தந்தை அப்பொழுது கைத்தறி வியாபாரத்தில் கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்தார் (இன்று ராதாகிருஷ்ணன் பறந்து கொண்டிருக்கிறான். மன்னிக்கவும், பறந்து கொண்டிருக்கிறார்). மயில்சாமியின் தந்தை ஜவுளிக்கடை வைத்திருந்தார். "தம்பி, உன் கடையில டெயிலர்ட்ட சொல்லி ஒரு டஸ்ட்டர் தெச்சட்டு வாயேன்” என்று ஒரு ஆசிரியர் கோரிக்கை விடுப்பார். டஸ்ட்டர் வந்ததும் வகுப்பே இது மயில்சாமி டஸ்ட்டர் என்று கொண்டாடும். இந்த இருவருக்கும் நடுவில் நான் மட்டும் ‘நே’ என்று விழித்துக் கொண்டிருப்பேன். ஒரு கூலித் தொழிலாளியின் தந்தைக்கு என்ன அறிமுகம் இருக்க முடியும்! மனம் ஏங்கும்; நம்மை எந்த வாத்தியாருக்கும் தெரியலியே என்று. ஆனால் அதற்கும் ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது.



ஒரு முறை அம்மாவுக்காகக் கடைக்குச் சென்று சாமான் வாங்கிக் கொண்டு வந்து கொண்டிருக்கும்போது என் தந்தை தமிழ் வாத்தியாருடன் வழியில் பேசிக்கொண்டிருந்தார். இது போதாதா எனக்கு... ஓடிப்போய் அப்பா என்று என் தந்தையின் கையைப் பிடித்ததும், ‘உங்க பையனா?’ என்றார். என் அப்பா ‘ஆம்’ என்றதும் ‘நல்லா படிக்கிறான்’ என்றார். வீட்டிற்கு போனதும் அப்பா அம்மாவிடம் சொன்னார். ‘பத்திரம் எழுதுறவர் பையனை பார்த்தேன், நம்ம பையனை நல்லா படிக்கிறான்னு சொன்னார்; இவனை மாத்திரம் யாரு பாத்தாலும் நல்லா படிக்கிறன்னுதான் சொல்றாங்க. ஆனா நம்ம பெரிய பையனை அப்படி ஒண்ணும் சொல்லக்காணோம்’. ஆம். இப்படி நானாகத்தான் சுயமாக என் மதிப்பை சக ஆசிரியர்களிடமிருந்து சம்பாதித்துக் கொண்டேன். ஆனால், அதற்காக நான் முதல் தேர்வு முடியும் வரை காத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் என் பராக்கிரமம் வெளிப்படும். யார் இந்த பையன் என்று விழியை உயர்த்துவார்கள்.

ஒரு முறை ஒன்பதாம் வகுப்பு படிக்கும்போது, திருத்திய கட்டுரை ஏடுகளைக் கொடுக்கும்போது, ஆங்கில ஆசிரியர் சண்முகம் சொன்னார். “தம்பி, உன்னுடைய கட்டுரையில ஒரு சின்ன தப்பு கூட இல்லடா; மற்ற ஆசிரியர்கள் கிட்ட

சொன்னப்ப கூட, அவனா… அவன் நல்லா படிப்பான் சார்னு சொன்னாங்கடா… மாணவன்னா இப்பிடித்தான் இருக்கணும்” என்றார். ராதாகிருஷ்ணன் என் காதில் கிசுகிசுத்தான், “எப்பிடிரா இப்பிடி படிக்க முடியுது…” இதில் ஆச்சரியம் என்னவென்றால் இப்படிக் கேட்டவர்களெல்லாம் இன்று பேராசிரியர்களாக, பேங்க் மேனேஜர்களாக இன்னும் என்னென்னவெல்லாமாகவோ இருக்கிறார்கள். ஆனால் நான் மட்டும்… காரணம், என் வாழ்க்கையையே புரட்டிப்போட்ட அந்த இரண்டு சம்பவங்கள்…

அன்று சித்திரைப் புத்தாண்டு விடுமுறை. எங்கள் வீட்டின் அருகிலேயே ஒரு எலிமெண்ட்ரி ஸ்கூல்; ஐந்தாம் வகுப்பு வரைக்கும் நான் அங்குதான் படித்தேன். விடுமுறை நாளென்றால் நண்பர்களெல்லோரும் அங்குதான் கூடுவோம். கபடி, ஐஸ் விளையாட்டு, சமயத்தில் யாராவது புண்ணியவான் பேட் கொண்டு வந்தால் கிரிக்கெட். அன்றும் ஆடினோம். மத்தியானம் ஆனதும், பசிக்குதுடா என்றபடி ஒவ்வொருவராக ஜூட் விடத் தொடங்கினார்கள். இறுதியில் நான் மட்டும் எஞ்சியிருந்தேன்.

ஒரு மணிக்கு மில் சங்கு ஊதும்போதுதான் அம்மா புகையிலைக் குடோனில் வேலை முடித்து வருவாள். மணி பன்னிரண்டரைதான் ஆகியிருக்கும்போல் தோன்றியது. சாவி அம்மாவிடம் இருக்கும். எனவே வீட்டுக்கும் போக முடியாது. அந்தப் பள்ளியின் மைதானம் எல்லாம் மணலாகவே இருக்கும். விளையாடும்போது கீழே விழுந்தால் கூட அடிபடாது. அதனாலேயே எங்களுக்கு அந்த மைதானம் ரொம்பப் பிடிக்கும். யாருமில்லாததால் நான் மட்டும் மணலில் அமர்ந்தபடி கைகளால் மணலை அளைந்தபடி இருந்தேன். அதில் ஒரு தனி சுகம் எனக்கு. அன்றும் அப்படித்தான் கைகளால் மணலை அளைந்து கொண்டிருந்தேன். அப்போதுதான் அது என் கைக்குத் தட்டுப்பட்டது. அட, சாவி! மிகவும் பழுப்பேறியிருந்தது யாரோ ரொம்ப நாள்களுக்கு முன் தொலைத்திருக்க வேண்டும்…

அப்போதுதான் எனக்கு அந்த விசித்திர எண்ணம் தோன்றியது. பள்ளிக்கூட அறையின் பூட்டை இந்த சாவி திறக்குமா? உடனே செயல்படுத்தத் தொடங்கினேன். அந்த நேரம் பார்த்து, வாட்ச்மேன் வர விதி விளையாடியது. என்னுடைய செய்கை சந்தேகத்தைத்தர, ‘யார்றா அது, அங்கெ என்ன பண்றே?’ ஓடி வந்தார். நான் கையில் சாவியுடன்,சாவி பூட்டுடன். இது போதாதா அவருக்கு? ‘திருட வந்தியா?’ கேட்டபடி சட்டையைப் பிடித்தார். ‘இல்ல சார். இங்கெ இந்த சாவி கிடைச்சுது. இந்த பூட்டைத் திறக்குமான்னு சும்மாவாச்சும் முயற்சி பண்ணேன்” உதறலில் டவுசர் நனைந்தது. நிலைமையை மோசமாக்க வந்து சேர்ந்தார் அமிர்தசாமி வாத்தியார்.

நான் மூன்றாம் வகுப்பு படிக்கும்போது எனக்கு வகுப்பாசிரியர் இந்த அமிர்தசாமி வாத்தியார். நான் ஆறு வயது வரை பள்ளிக்குச் சென்றதில்லை. அதன்பின் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டார் என் அப்பா. அந்த ஆசிரியருக்கு மாதம் ஒரு ரூபாய் சம்பளம். ஒன்றாம் அல்லது இரண்டாம் வகுப்பு வரை, தமிழும் கணக்கும் மட்டும் சொல்லிக்கொடுப்பார். அவருக்கு ஆங்கிலம் தெரியாது. அதற்கு மேல் அவராகவே மாணவர்களைக் கொண்டு அரசாங்கப் பள்ளியில் சேர்த்து விடுவார். விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பது போல் நான் ஒரே வருடத்தில் முதல், இரண்டாம் வகுப்பு தமிழ் மற்றும் கணக்கு முடித்து விட்டேன். அப்போது மாணவர்கள் சேர்க்கைக்கு அரசுப் பள்ளி ஆசிரியர்கள் வீடு வீடாக வருவார்கள். எனவே இப்போது மாதிரி சட்ட திட்டங்கள் கிடையாது. இருப்பினும் எனக்கு ஒரு சிக்கல் வந்தது. எங்கள் திண்ணைப்பள்ளி ஆசிரியர் ஒரு குரூப்பாக மாணவர்களைக் கொண்டு சேர்ப்பார். ஒரு வருடமாக என்னுடன் படித்த மற்ற எல்லா மாணவர்களையும் இரண்டாம் வகுப்பில் சேர்த்து விட்டு என்னை மட்டும் மூன்றாம் வகுப்பிற்கு சிபாரிசு செய்தார். இது அப்போது பொறுப்பிலிருந்த அமிர்தசாமிக்குப் பிடிக்கவில்லை. எவ்வளவோ சொல்லியும், என் திண்ணை ஆசிரியர் மசியவில்லை; மாறாக என் பராக்கிரமத்தைப்பற்றி விலாவாரியாகச்சொல்லி மூன்றாவதில் சேர்த்து விட்டார். அப்போது ஆரம்பித்தது வினை. என்னை மீறி நீ மூன்றாவதுக்கு வந்திருக்கிறாயா, உன்னை பார்த்துக்கொள்(ல்)கிறேன் என்று கருவினார்.

சொல்லி வைத்தது போல் முதல் நாளே என்னைக் க்ளீன் போல்டாக்கினார். அங்கு மாலையில் வகுப்புகள் முடியும் நேரத்தில் பாடம் நடத்த மாட்டார்கள். மாறாக, ’குத்தடி குத்தடி சைலக்கா, குனிஞ்சு குத்தடி சைலக்கா…’ போன்ற பாடல்களை மாணவ மாணவியர் பாட வேண்டும். திண்ணை இது எதைப்பற்றியும் சொல்லிக்கொடுத்ததில்லை. பாடம் மட்டுமே நடத்தியிருக்கிறார். பேக்கு மாதிரி விழித்துக்கொண்டு நிற்க என்னை வசமாக மாட்டினார் அமிர்தசாமி. ’நீ லாயக்கில்லை, இரண்டாம் வகுப்புக்கு உன் பழைய நண்பர்களுடன் போய்ச்சேர்’ என்று டீஸ் செய்ய ஆரம்பித்தார். எனக்கு இரவுகளில் உறக்கம் வராமல் புரண்டேன். மானசீகமாக என் திண்ணை வாத்தியாரைத் திட்டினேன். பேசாமல் இரண்டாம்

வகுப்புக்கே போய் விடலாமா என்று எண்ணினேன். நல்ல வேளை, அப்போது நடந்த மறு வகுப்பு பிரிப்பில் நான் பேகம் டீச்சரிடம் மாற்றப்பட்டேனோ, தப்பித்தேன். அந்த டீச்சர் நடத்திய முதல் டிக்டேஷன் டெஸ்டில் நான் ஒருவன் மட்டுமே தவறில்லாமல் எழுதி கைதட்டல் பெற்றேன். அப்போது ஒரு வகுப்புக்கும் இன்னொரு வகுப்புக்கும் தடுப்புகள் கிடையாது. எனவே, இதை பக்கத்து வகுப்பில் பாடம் நடத்திக்கொண்டிருந்த அமிர்தசாமி கட்டாயம் கவனித்திருக்க வேண்டும். ஆனாலும், ஏனோ அவருக்கு மட்டும் என் மேல் வன்மம் குறையவேயில்லை. அதன்பின் ஐந்தாம் வகுப்பு முடித்து உயர் நிலைப் பள்ளிக்குச் சென்று விட்டேன்.

இப்போது நீண்ட இடைவேளைக்குப்பின் அவருக்கு சந்தர்ப்பம் வாய்த்தது. வாட்ச்மேனிடம் என்ன விஷயம் என்று வினவினார். அவன் சொல்லச் சொல்ல என்னை அப்படியே கொத்தாகத் தூக்கினார். “ராஸ்கல், நீ அப்பவே மூணாவது வந்தவன்தானேடா, அதான் இப்ப இந்த லெவலுக்கு வந்திருக்கே” என்றபடி ஓங்கி அறைந்தார். வாட்சுமேனும் புதுசு; அவனுக்கு என்னைப் பற்றித் தெரிய நியாயமில்லை. ‘இவனை இப்பிடியே விட்டா சரி வர மாட்டான். நட, ஸ்டேஷனுக்குக் கொண்டு போய்டலாம்’ என்றவரிடம், ”சார், சார் இந்த ஒரு தடவை… தெரியாம செஞ்சிட்டேன்” என்று கெஞ்சினேன். மசியவில்லை. ஸ்கூல் அருகிலேயே போலீஸ் ஸ்டேஷன். நெட்டித்தள்ளிக் கொண்டு போனார்கள். என்ன என்று இன்ஸ்பெக்டர் கேட்டதும் திருட்டு கேஸ் என்றார்கள். ‘அடப்பாவிகளா, உங்களுக்கெல்லாம் இதயமே கிடையாதா. மிஞ்சி மிஞ்சிப் போனா பஞ்சாயத்து போர்டு ஸ்கூல்ல ஒரு நாலு பெஞ்ச், ஒரு டேபிள் சேர் இருக்குமா… நானோ பூஞ்சை, ஒல்லிப்பிச்சான் அதுகளைத் தூக்கக்கூட முடியாது. என்னைப்போயி திருடன்னு பிராது கொடுக்கிறாங்களே’ மனதிற்குள் அரற்றினேன். ‘படிக்கிற வயசிலே திருட்டா,’ இன்ஸ்பெக்டர் பொளேர் என்று பொடனியில் அறைந்தார். அதற்குள் விஷயம் பரவி என் தந்தையும், தாயும், பெரியப்பாவும் மற்றவர்களும் வந்து விட்டார்கள். ‘எம் பைய அப்பிடிப்பட்டவனில்லே, ஏதோ தெரியாம செஞ்சுட்டான். இந்த ஒரு தடவை வுட்ருங்க’ என்று என் தந்தை எதிர்ப்பட்டவர்களிடமெல்லாம் காலில் விழாத குறையாகக் கெஞ்சினார். ஒரு வழியாக பஞ்சாயத்து பேசி, இன்ஸ்பெக்டர் கடுமையாக எச்சரித்து அனுப்பினார்.

இதன் பிறகு பள்ளிக்குச் சென்றபோது இதனுடைய தாக்கம் நன்றாகவே தெரிந்தது. பள்ளியில் யார் எதைத் தொலைத்தாலும் என்னை சந்தேகக்கண் கொண்டு பார்க்க ஆரம்பித்தார்கள். போலீஸ் ஸ்டேஷன் பற்றி பாடங்களில் வரும்போதெல்லாம், பாடம் நடத்தும் ஆசிரியர் ஜெயில் பத்தி ஏதாவது சந்தேகமிருந்தா என்னிடம் கேட்டுக்கொள்ளச் சொல்வார். எல்லோரும் சிரிப்பார்கள். இவ்வளவுக்கிடையிலும் ஒரு ஆறுதல் இருந்ததென்றால் அது சண்முகம் ஆசிரியர்தான். ’தம்பி, நீ இதைப் பத்தியெல்லாம் கவலைப்படாதே; நல்லாப் படி. மார்க் வாங்கு. வசதியில்லைன்னு பயப்படாதே. நான் பாங்க்ல லோன் வாங்கித் தர்றேன், தெரிஞ்ச மானேஜர் இருக்காரு’ என்று உற்சாகமூட்டினார். இதே வெறியில் இரண்டு வருடங்கள் படித்தேன். எஸ்.எஸ்.எல்.சி தேர்வு நன்றாக எழுதினேன். விடுமுறையை அனுபவிக்க ஆரம்பித்தேன்.

வளர்ந்து விட்ட காரணத்தால் அப்போதெல்லாம் விளையாட்டை தவிர்த்து, பொது நூலகம் செல்வதை வழக்கமாகக்கொண்டிருந்தேன். தவிரவும் சேரப்போகும் கல்லூரிகளின் விளம்பரங்களை எதிர்பார்த்தும், ஆங்கில அறிவை வளர்த்துக்கொள்ளும் நோக்கத்துடனும் ஆங்கில செய்தித்தாள்களைப் படிப்பதற்காகப் போய்க்கொண்டிருந்தேன். அப்போதுதான் இரண்டாம் முறையாக என் வாழ்க்கையில் விதி விளையாடியது.

நூலகத்திற்குப் போகும் வழியில் ஒரு மின்மாற்றி இருந்தது. ஒரு நாள் நூலகத்திற்குப் போகும்போது இரண்டு லைன்மேன்கள் அதைப் பழுது பார்க்க வந்தார்கள். ஒருவர் அருகிலுள்ள கம்பத்தில் ஏறத்தயாராகும் முன், ’அண்ணே, டிரான்ஸ்பார்மரை ஆப் பண்ணுங்கண்ணே’ என்றார். உடனே அடுத்தவர் அதன் முன்னே சென்று, ஒரு குழாய் போன்ற லீவரைக் கீழே இழுத்து வலப்புறம் தள்ள மேலே ட்ரான்ஸ்பார்மரின் மூன்று பேஸ்களும் செயலிழந்தன. இது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அதுவும் நான் எஸ்.எஸ்.எல்.சியில் விருப்பப்பாடம் கணிதம். எங்களையெல்லாம் மற்ற மாணவர்கள் எஞ்ஜினியர்ஸ் என்பார்கள். அந்த நேரத்தில் என்னை ஒரு எலக்ட்ரிகல் எஞ்ஜினியராகக் கற்பனை செய்து கொண்டு அவர்கள் செய்யும் வேலைகளை மும்முரமாகக் கவனிக்க ஆரம்பித்தேன். வேலை முடிந்ததும் மீண்டும் அந்த லீவரை ரிவர்ஸில் கொண்டு வந்து ட்ரான்ஸ்பார்மருக்கு உயிரூட்டினார்.

திரும்பச் செல்லும்போது, ‘ஏண்ணே, லாக் பண்ணலியா?’ என்று கேட்க, ‘சாவியை எங்கியோ தொலைச்சிட்டேம்பா’, சொல்லியபடி ஒரு நட்டை செருகி போல்டைப்போட்டார். பின் இருவரும் நடக்க

ஆரம்பித்தனர். நானும் அங்கிருந்து கிளம்பினேன்.

இது நடந்து ஒரு பத்து நாளிருக்கும். நான் நூலகத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்தேன். லேசாக இருட்ட ஆரம்பித்திருந்தது. கடைகளிலும் வீதியிலும் மின் விளக்குகள் எரியத் தொடங்கியிருந்தன. ட்ரான்ஸ்பார்மரை நெருங்கியதும் என் மூளையில் 'பளிச்'. 'இப்ப இந்த ட்ரான்ஸ்பார்மரை ஆப் செஞ்சு பாக்கலாமா?' நீ ஒரு எலக்ட்ரிகல் எஞ்சினியர் ஆகப்போகிறாய் என்று உள்மனது ஓத மெதுவே அதை நோக்கிச்சென்றேன்.

அப்போது அந்த வழியே யாரோ வரவே சற்றே தாமதித்தேன். என்னை அந்த யாரோ தாண்டிச்சென்றதும் சுற்றுமுற்றும் பார்த்து விட்டு நான் ட்ரான்ஸ்பார்மரை நெருங்கினேன். போல்ட்டிலிருந்து நட்டை உருவி,அந்த லைன்மேன் செய்தது போல் லீவரைக் கீழே இழுத்து வலப்புறம் தள்ள, அனைத்து விளக்குகளும் அணைந்து எங்கும் ஒரே இருட்டு.

"டேய் யார்றாது, ட்ரான்ஸ்பார்மர்ல கை வச்சது?" சத்தம் கேட்டதும்தான் என்னை யாரோ கவனித்திருக்கிறார்கள் என்று உணர்ந்தேன்.

ட்ரான்ஸ்பார்மரைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதா, இல்லை, ஓடிவிடலாமா என்று யோசித்து முடிப்பதற்குள் சத்தம் போட்டவர் அருகில் வந்து விட்டார். இனி இருந்தால் ஆபத்து என்று உள்மனம் சொல்ல நானும் ஓட ஆரம்பித்தேன். உடனே அவர்,"திருடன்,திருடன்" என்று கத்த, அருகில் கடையில் இருந்தவர்களும் சேர்ந்து துரத்தினர். கடைசியில் நான் மாட்டிக்கொண்டேன். அதற்குள் ஒருவர் ட்ரான்ஸ்பார்மரை சரி செய்து விட என்னை நன்றாக வெளிச்சத்தில் பார்த்தனர். என் ஸ்கூல் அனுபவத்தை முன்பே அறிந்த ஒருவர் அங்கேயிருந்தார். " ஓ நீதானா, அங்க இங்கன்னு இப்ப ட்ரான்ஸ்பார்மரை ஆப் பண்ணி திருட ஆரம்பிச்சுட்டியா"

"இல்ல சார்… சும்மா இந்த ட்ரான்ஸ்பார்மரை… ஆஃப் பண்ணா…" உளறினேன்.

"பையனை பார்த்தா சின்னவனாத் தெரியறான், இவ்வளவு வேலை செய்றானா?" கூட்டத்தில் ஒருவர். உடனே அங்கிருந்தவர்களில் இரண்டு மூன்று பேர் தர்ம அடி போட ஆரம்பித்தார்கள். ஒருவர் தடுத்து, 'ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆய்டப்போகுது; பேசாம போலீஸ்ல ஒப்படைச்சுடுங்க' அறிவுறுத்தினார்.

மீண்டும் அதே போலீஸ் ஸ்டேஷன்; அதே சப் இன்ஸ்பக்டர். "வாடா, இப்ப என்ன?" விஷயம் கேள்விப்பட்டதும் என் சட்டையை உருவி முதுகில் சாட்டையால் நாலு விளாறு விளாறினார். நான் ஐயோ என்று கதறும் சத்தம் கேட்டு என் தந்தை வந்து விட்டார். "சார், சின்னப்பையன்…" குறுக்கே வந்த என் அப்பாவைப் பிடித்துத் தள்ளினார்.

"தாளி, அன்னிக்கே உன்னை பெண்டு எடுத்திருக்கணும். விட்டது தப்பாப் போச்சு"

"சார் சார், அப்படியெல்லாம் சொல்லாதீங்க" என்ற அப்பாவிடம், "மரியாதையா இங்கிருந்து போய்டு. இல்லைன்னா, நீ சொல்லித்தான் உம் பையன் இப்பிடி பண்ணான்னு சொல்லி உன்னையும் தூக்கி உள்ளெ போட்ருவேன்… கான்ஸ்டபிள் அந்த ஆளை முதல்லெ வெளியெ தள்ளு"

உடனே கான்ஸ்டபிள் என் அப்பாவை நோக்கிச்செல்ல, "ஏண்டா, உம்புத்தி இப்பிடிப்போகுது" என்று தலையிலடித்தபடி அவராகவே வெளியேறினார்.

மாஜிஸ்ட்ரேட் முன் ஆஜர் படுத்தப்பட்டபோது, அரசாங்க சொத்தை சேதப்படுத்த முனைந்தது, ஊர் அமைதிக்குப் பங்கம் விளைவிக்க முற்பட்டது, திருட முற்பட்டது… போன்ற குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டன. குற்றங்களின் தன்மையைக் கருத்தில் கொண்டும், அதே சமயம் குற்றம் ஏதும் நடைபெறாததாலும் என் வயது பதினாறைத் தாண்டாததையும் வைத்து என்னை நாற்பத்தைந்து நாட்கள் சீர்திருத்தப் பள்ளியில் வைக்க உத்தரவிட்டார்.

நான் வெளியே வந்த அன்றுதான் எஸ்.எஸ்.எல்.சி ரிசல்ட். நான் பள்ளியிலேயே முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்றிருந்தேன். பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சியில் முதல் மதிப்பெண் பெறும் மாணவனுக்கு ஒவ்வொரு வருடமும் வாட்ச் பரிசளிப்பது வழக்கம். பள்ளிக்கு மார்க் சீட் வாங்கச் சென்றபோது, எல்லோரும் 'எப்படா ஜெயில்லருந்து ரிலீசானே' என்று கேட்டனர். வேதனை, அவமானம், தலைகுனிவு ஒன்று சேர்ந்து கண்ணீராக வழிந்தது. மௌனமாக வெளியேறும்போது ஒரு ஆசிரியர் தலைமையாசிரியரிடம் கேட்டார். "சார் இந்த வருஷம் பர்ஸ்ட் பிரைஸ் இந்த பையனுக்குத்தானே கொடுக்கணும்"

"அதெப்படிங்க?" என்று அவசரமாக மறுத்தார் தலைமையாசிரியர். "டிஸிப்ளின்னு ஒண்ணு இருக்கல்ல" என்றார். "சார் சொல்றதுதான் சரி" என்று ஆமோதித்தார்கள் சக ஆசிரியர்கள்.

ஒரு வாரம் வெளியில் எங்கும் செல்லாமல் வீட்டிலேயே இருந்தேன். மேலே படிக்க ஆசை. அப்பாவும் அம்மாவும் என்னோடு முகம் கொடுத்துக் கூட பேசவில்லை. தவிரவும் வசதியும் இல்லை. சரி இப்படியே இருந்தால் வேஸ்ட் என்றெண்ணியபடி சண்முகம் ஆசிரியரைப் பார்க்கச் சென்றேன். அவர்தானே சொன்னார், மேலே படிக்க வங்கியில் லோன் கொடுப்பார்களென்று. அவரைப்பார்த்தபோது, 'என்னப்பா?' என்றார். தயங்கி தயங்கிக்கேட்டேன். ஒன்றும் சொல்லாமல் அமர்ந்திருந்தார். என்னைப் பார்த்து பரிதாபப்பட்ட அவரது துணைவியார், "பாவம் ஹெல்ப் பண்ணுங்களே, பையன் நலலா மார்க் வாங்கியிருக்கிறானே…" என்றார். உடனே எழுந்து என்னை அழைத்துக்கொண்டுப் புறப்பட்டார்.

வங்கியில் மேலாளரைப் பார்த்துப் பேசும்போது எல்லாம் நல்லபடியாகவே போய்க்கொண்டிருந்தது, மேனேஜரின் அறைக்குள் ஹெட்கிளார்க் வரும் வரை. எங்கள் சம்பாஷணையை கேட்ட அவர், 'சார், இந்தப் பையனுக்கா லோன் தர்றீங்க. இவன் ஜெயிலுக்குப் போயிட்டு வந்தவனாச்சே' என்று போட்டுடைத்தார். அதற்குப்பின் மேனேஜர் ஒற்றை வார்த்தையில் ஸாரி என்றார்.

"வீட்டிலெயே எத்தனை நாள்தான் இருப்பே, வேலை வெட்டி இல்லாமே", அப்பா சொன்னதோடு நிற்காமல் தனக்குத் தெரிந்தவர்களிடம் கூட்டிப்போனார். என்னைப்பற்றி அனைவருக்கும் தெரிந்திருந்ததால் ஏதாவது சாக்குப்போக்கு சொல்லித்தட்டிக் கழித்தார்கள். கடைசியில் வெளியூருக்குக் கூட்டிப்போய் ஒரு ரைஸ்மில்லில் சேர்த்து விட்டார். நன்றாகப் படித்திருந்தும் வசதியில்லாததால் வேலைக்கு அனுப்புவதாக அப்பா சொன்னார். உரிமையாளரும் என் மேல் இரக்கப்பட்டு அங்கு வரும் மூட்டைகளை, வெளியில் செல்லும் மூட்டைகளை கணக்கு வைப்பது. அரவைக் கணக்கை சரி பார்ப்பது போன்ற வேலைகளை சொல்லி சம்பளம் மாதம் நூற்றைம்பது ரூபாய் என்றார். சமயத்தில் இரவில் லோடு வந்தால் இரவிலும் வேலையிருக்கும் என்று கண்டிஷன் போட்டார். சேர்ந்ததிலிருந்து வேலை நன்றாகவே போய்க்கொண்டிருந்தது, ஒரு நாள் போலீஸ் என் வீட்டுக்கு வரும் வரை. முந்திய இரவு நிறைய லாரிகள் வந்ததால் அன்று வேலை முடிய ஏறத்தாழ விடியற்காலையானது. ஓனர் மறு நாள் லேட்டாக வந்தால் போதுமென்று சொல்லியிருந்தார். எனவே தூங்கிக்கொண்டிருந்தேன். அப்போது அம்மா வந்து எழுப்பினாள்,'டேய், போலீஸ் வந்திருக்குடா, நம்ம வீட்டுக்கு". ஏற்கனவே நிறைய அனுபவமானதால் அலறிக்கொண்டு எழுந்து வெளியே வந்தேன். ஸ்டேஷனுக்கு இன்ஸ்பெக்டர் கூப்பிட்டதாக சொன்னார்கள். 'என்ன சார் விஷயம்…?'என்று தயங்கியவனிடம், 'தொரை, சொன்னாத்தான் வருவீங்களோ, சும்ம வாடா" இழுத்துக் கொண்டு சென்றார்கள்.

ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர், 'சொல்லுடா, நேத்து நடந்த திருட்டில உன் பங்கென்ன?'என்று கேட்டார்.

"ஐயோ சார், நான் இப்பத்தான் ஒழுங்கா வேலைக்குப் போயிட்டிருக்கேன். இந்த மாதிரி தப்புத்தண்டாவுக்கெல்லாம் போக மாட்டேன்" கதறினேன்.

"இத பார், நேத்து ராத்திரி செட்டியார் கடையில புகுந்து மூணு பொட்டி சிகரெட்(சிகரெட் பிடித்தல் உடல் நலத்திற்குத் தீங்கானது), நாலு பண்டல் பீடி திருடியிருக்கீங்க. மரியாதையா யார் யார் சேந்து பண்ணதுன்னு சொல்லிட்டா தப்பிச்சீங்க… இல்லே, மகனே கைமா பண்ணிடுவேன் ஜாக்கிரதை"

"சார் நான் நேத்து ராத்திரி பூரா ரைஸ்மில்லிலதான் இருந்தேன்…"

"ஓ, அலிபி கிரியேட் பண்ற அளவுக்கு வளர்ந்திட்டியா?"

'நான் சத்தியமாக' என்று அரற்றியதும் என்ன தோன்றியதோ தெரியவில்லை, இன்ஸ்பெக்டர் ஒரு கான்ஸ்டபிளை அழைத்து என்னைக் கூட்டிப்போய் தகவல் சரிதானா என்று பார்க்கச் சொன்னார். 'தலை தப்பியது யார் புண்ணியமோ' நினைத்தபடி போலீஸுடன் ரைஸ்மில் சென்றேன். போலீசைப் பார்த்ததும் ஓனர் நெற்றி சுருங்கியது. 'சார், நேத்து நைட் இவன் உங்க மில்லிலதான் இருந்தானா?' என்ற போலீசின் கேள்விக்கு ஆமென்றார். அப்பாடா என்று பெருமூச்சு விட்டேன். போலீஸுக்கு ஏமாற்றம். 'ஏன் கேக்கறீங்க' ஓனர் வினவினார். 'ஒரு திருட்டு கேஸ் சம்பந்தமா இவனை விசாரிக்க வேண்டியிருந்தது. அதனாலெதான்' என்றதும் திருட்டா என்று திடுக்கிட்டு என்னைப் பார்த்தார் ஓனர். 'இவனைப்பத்தித் தெரியாதா உங்களுக்கு' என்றபடி என் சுயபுராணத்தை அரங்கேற்றினார்கள் போலீஸார்.

'என்னை அப்படிப்பார்க்காதீர்கள், நான் அப்படிப்பட்டவனில்லை' என்பது போல் என் முதலாளியைப் பார்த்தேன்.

‘சரி சார், அப்ப நாங்க வர்றோம்’ போலீசார் நடையைக்கட்ட ஓனர் என்னை அழைத்தார். ‘இந்தா தம்பி பத்து நாள் சம்பளம். நீ நாளையிலிருந்து வேலைக்கு வர வேண்டாம்”

வீட்டில் வெறித்தபடியே உட்கார்ந்திருந்தேன். பைத்தியம் பிடிக்கும்போல் இருந்தது. சற்றே வெளியே சென்றால் தேவலாமென்று கருதிக் கிளம்பினேன். மனம் போன போக்கில் நடந்தவனை ஒரு கும்பல் அணுகியது. ‘எங்க கூட சேந்துக்கிறியா, எல்லாத்துக்கும் சம பங்கு’ என்றான் தலைவன் போலிருந்தவன்.

“நீங்க என்ன சொல்றீங்கன்னே எனக்கு புரியலியே”

“இதப் பார்றா, ஐயா இவ்ளோ சாதுவா இருக்கார்” என்று கிண்டலடித்தவனை கையமர்த்திவிட்டு முதலில் பேசியவனே மீண்டும் பேசினான்.

“ஸாரி, நீங்க நெனைக்கற மாதிரி ஆள் இல்ல நான்” என்றேன்.

“இதப்பாருப்பா, போலீஸ் கண்ணு எப்ப உன் மேல விழுந்ததோ, அதுக்குப்பிறகு நீ எங்க ஏறி நின்னு கத்தினாலும் எடுபடாது. யாரு உன்னை வேலைக்கும் எடுத்துக்கமாட்டாங்க; அப்பிடியே எடுத்தாலும் எது காணாமப்போனாலும் நீதாம்பாங்க. பேசாமே நாங்க சொல்றதைக்கேள்” ஆளாளுக்கு மாறி மாறிக் கரைத்தனர். பக்கத்தில் வண்ணார் ஓங்கி ஓங்கி அடித்து துவைக்கும் சத்தம் கேட்டது. இறுதியாக ஒத்துக்கொண்டேன்.

அன்றிரவே என் முதல் அரங்கேற்றம் ஆரம்பமானது.’ஆமா நீ கம்பியில பூட்டை நல்லாத் திறப்பியாமே?’ கேள்விக்கு பதில் பேசாமல் நடந்தேன். ஆயிற்று; முதல் போனி முடிந்தது. சுளையாக என் பங்காக அறுநூறு ரூபாய் கிடைத்தது. ‘எப்பவாவது மாட்டிக்கிட்டா உயிரே போனாலும் காட்டிக்கொடுக்கூடாது’ என்றார்கள். தலையாட்டினேன். ‘பரவாயில்லையே, ரைஸ்மில்லில் இது நான்கு மாத சம்பளம்.’. மனம் குதூகலித்தது. அதற்குப்பிறகு நாலைந்து முறை வெற்றிகரமாக நடந்தது. ஒருமுறை எக்குத்தப்பாக மாட்டிக்கொண்டேன். அன்று சிலேட்டில் என் பெயர், நம்பர் எழுதி போட்டோ எடுத்தார்கள். அதன்பின் என் போட்டோ பஸ் ஸ்டேண்ட், ரெயில்வே ஸ்டேஷன் என்று நிறையப்பேர் கூடும் இடத்தில் இவர்களிடம் ஜாக்கிரதையாக இருங்கள் என்ற வாசகத்துடன் வைக்கப்பட்டது. அதனால்தான் இப்போதும் என் நண்பர்களை எப்போதாவது எங்காவது பார்த்தால் தலை குனிந்து நடக்கிறேன். இதற்கு யாரைக் குற்றம் சொல்ல?


அன்று பொங்கல் தினம். சன் டிவியில் கஜினி படம். படத்தின் துவக்கத்தில் ஒரு டாக்டர் விளக்கிக் கொண்டிருந்தார். ‘இதோ மூளையின் இந்த பாகமான செரிப்ரம் என்ற பகுதிதான் நம்முடைய வெறுப்பு, கோபம், அவ்வப்போது தோன்றும் திடீர் எண்ணங்களுக்குக் காரணகர்த்தா’... ஆம், என் மூளையிலுள்ள செரிப்ரம் இரண்டு முறை எனக்கு அப்படி கட்டளை இடாமல் இருந்திருந்தால் இன்று நானும் அவர்களைப்போல, ஏன், உங்களைப்போல ஒரு நல்ல நிலையில் இருந்திருப்பேன்.



என் மூளையிலுள்ள செரிப்ரம் இரண்டு முறை
எனக்கு அப்படி கட்டளைக்கு அப்படி கட்டளை இடாமல் இருந்திருந்தால்...

# அஹிம்சை என்பது என்ன?

**தமிழ்க்காதலன்,**
**சிலம்பூர், அரியலூர்**




**உ**லகில் தோன்றும் ஒவ்வொரு உயிரும் தனிச்சிறப்புடன் பிறக்கிறது. தன் இனத்தால் ஒத்த பண்புகளை பெற்றிருந்தாலும், அதையும் தாண்டி தனித்து தன்னை முன்னிலை படுத்தும்படியாய் மிளிரும் குணம், பண்பு, செயல் மூலம் தனித்துவம் பெறுவதே உயிர்களின் சிறப்பு. இதில் மனித இனம் மிகவும் நுட்பமானதும், புரிந்துகொள்ள இயலாததாகவும் இருப்பது தனிப்பண்பின் உச்சம் எனலாம். அந்த வகையில் உலகில் தோன்றிய மாந்தருள் தனக்கென தனி இடம் பிடித்த மனிதர்களுள் இந்த நூலின் ஆசிரியரும் ஒருவராகிறார். ஆசியாவின் துணைக்கண்டமாகவும், தீபகற்பமாகவும் விளங்கும் பெரும் நிலப்பரப்பின் மிக சிக்கலானதும், கொடூரமானதுமான ஒரு காலகட்டத்தில் பிறந்து, ஆலையிடப்பட்ட கரும்பாக வாழ்நாள் முழுதும் பிழியப்பட்ட ஒரு மனிதனின் கட்டுரைத் தொகுப்பாக தமிழில் வெளிவந்த அஹிம்சை என்றால் என்ன? என்ற நூலினை தேடலுடன் படிக்க நேர்ந்தது. அந்த மகானுபவத்தை உங்களுடன் பகிர்ந்துக்கொள்வது மட்டற்ற மகிழ்ச்சியே.

அஹிம்சை என்பது என்னவாக இருக்கும் என்கிற ஆய்வு மனதுடன் பக்கங்களை நான் புரட்ட, பக்கங்கள் என்னை புரட்ட, தொடரும் போராட்ட மனநிலையிலேயே தொடர வேண்டிய அத்தியாயங்கள். பொதுவாக தமிழகம் பலருடைய வாழ்க்கையை புரட்டிப்போட்டிருக்கிறது. அப்படி ஒரு நிகழ்வு 1916-ல் சென்னையில் நடந்த பிரசங்க கூட்டத்தில் மோகன்தாஸ்

அஹிம்சையை பற்றி விரிவாக பேசத்துவங்கியதில் தொடங்குகிறது நூல்.

உலகமெங்கும் போர் தீயாய் பற்றி எரிந்து கொண்டிருக்க, பசியும், பஞ்சமும், பற்றாக்குறையும், நோயும் வாழ்க்கை பாடம் நடத்திக்கொண்டிருந்த காலக்கட்டத்தில் பிறந்த தலைமுறை இளைஞனுக்கே உண்டான வாழ்வியலை எதிர்கொள்ள ஏற்படும் தடுமாற்றம் நிறையவே அவருடைய சிந்தனைகளில் தென்படுகிறது.

உலகமெங்கும் நாடுகள் அடிமைகளாய் கிடக்க, கண்முன்னேயும், தன் முன்னேயும் விரிந்துக் கிடக்கும் சமூகச் சீரழிவுகளுக்கு தீர்வுதான் என்ன? எங்கிருந்து தொட்டு, எதை பற்றி தொடர்ந்து, எப்படி முடிவை காண்பது..? விடை தெரியாத வினாக்களுக்கு முன் அவரை போலவே நானும் கதியற்று நிற்கிறேன். தான் அடியெடுத்து வைக்கும் எல்லா பக்கங்களிலும் அடிமைகளின் அழுகுரலும், பசியும், பிணியும், நோயும் வாட்ட, வதங்கி நிற்கும் மக்கள். இன்னொருபுறம் உலகின் எல்லா செல்வங்களையும் கொள்ளையடித்துக் கொண்டுபோகும் ஆதிக்கவர்க்கம். எதிர்க்க திராணியற்ற பெருங்கூட்டமாய் உலக மக்கள். எதிர்த்தால் தோட்டாக்களை பரிசளிக்கும் பாசிச நாடுகள். இந்த சூழலுக்குள் சிக்கிக்கொண்ட ஒரு இளைஞன் எத்தனை தவிப்புகள், எத்தனை இழப்புகள், எத்தனை கொடுமைகள் தாண்டி, இதற்கான தீர்வை நோக்கி சிந்திக்க தொடங்கினால்... தடுமாற்றம் வராமல் எப்படி...??

முதல் சில அத்தியாயங்கள் படிக்கும் போது, அவருடனான கருத்து மோதல்களை என்னால் தவிர்க்க முடியவில்லை. ஆம். அஹிம்சை பற்றி அவர் பேசும்போது, காலச்சூழலை ஒட்டியும், கடந்துவந்த மரபுகளை ஒட்டியும், வாழ்வியல் பழக்கங்களோடும் இணைந்தே தன் கருத்தை சொல்கிறார். அதில் பல இடங்களில் நமக்கு முரண்பாடுகள் வருகிறது. இம்சைக்கு எதிரானது அஹிம்சை என்றான பொருளில் முதலில் வார்த்தையை தேர்வு செய்துவிட்டார். விளக்க முற்படும்போது ஆயிரம் எதிர்க்கேள்விகளை எதிர்க்கொள்ள வேண்டி இருக்கிறது.

குறிப்பாக ஒரு உதாரணம் பார்ப்போம். இயற்கையானது எது? என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரைக்கு பதில் கடிதம் ஒன்றை ஒரு வைத்தியர் எழுதியதாக குறிப்பிடுகிறார். (வைத்தியர் பெயரை குறிப்பிட்டிருக்கலாம்) அந்த வைத்தியர் மிக அழுத்தமாக கேள்விகளை அடுக்குகிறார். அவை சரியாகவும் இருக்கிறது. மனித இயல்பில் இயற்கையாய் அவன் எப்படியெல்லாம் செயல்படுவான் என்பதை அடிப்படையாக வைத்து உங்களது அஹிம்சை என்பது இதற்கு எதிராக இருக்கிறது என்றும், கடவுள் நம்பிக்கை அற்றவர்களுக்கு இது பொருத்தமாக இல்லை என்றும் கடிதத்தை தொடர்கிறார். பதில் அளிக்கும் விதம் உண்மையாகவே குழப்பமாகவும், தெளிவின்றியும் இருக்கிறது.

அஹிம்சை என்பது தன் முன்னே ஆபத்தை விளைவிக்கும் உயிருக்கு எதிரான வலிமையான எதிர்ப்பு உணர்வு என்றும், அது தன்னை துன்புறுத்துபவர்களுக்கு எந்த தீங்கினையும் எண்ணம், சிந்தனை, சொல், செயல் இப்படி எதன் மூலமும் நிகழ்த்தாத, தனக்கு நிகழும் துன்பத்தை முழுமையாக ஏற்று அனுபவிப்பதன் மூலம், தன்னை சுற்றி இருப்பவர்களை காக்கும் தியாக உணர்வு என்றும் குறிப்பிடுகிறார். நம்முடைய எதிர் உணர்வுகளை மட்டுமே விளைவுகள் இல்லாமல் வெளிப்படுத்த வேண்டும் என்கிற பொருளில் பேசுகிறார். இவர் உயிர் கொல்லாமை என்பதில் தொடங்கி புத்தரை உள்வாங்கி அவரின் கொள்கைகளை மாற்றுமொழியிலும், வழியிலும் பிரதிபலிக்கிறார். எதிரியை வெல்வதற்கு எதிரியையே நம்முடைய மதிப்புமிக்க நண்பராக்குங்கள் என்கிறார். அவர்கள் நம்மை முழுமையாக நம்பும்படி நடந்துகொள்ளுங்கள் என்கிறார். உயிர்வதை செய்வது யாராக இருந்தாலும் அது ஏற்க முடியாதது என்பதை ஆணித்தரமாக சொல்கிறார்.

மற்றொரு விதத்தில் அஹிம்சை என்பது தன்னொழுக்கம், கட்டுப்பாடு, தான் சார்ந்த சமூகத்திலும், குடும்ப அளவிலும் அஹிம்சையை செயல்படுத்த வேண்டும் என்கிறார். இதன் மூலம் ஆண், பெண் எப்படி வாழ்வியல் தீர்வுகளை எட்டலாம் என்று வாதிடுகிறார். அஹிம்சை என்பது எதிரி திருந்தும் வாய்ப்பை அவருக்கு வழங்கும் நற்செயல் என்கிறார்.

பைபிளில் சொல்லப்பட்ட பல சொற்றொடர்களை மேற்கோள் காட்டுகிறார். அஹிம்சையை விளக்க "உன்னை நீ நேசிப்பது போலவே உன் அயலானையும் நேசி", "நான் உனக்கு இரக்கம் காட்டுவது போலவே நீயும் பிறரிடம் இரக்கம் காட்டு", "இதயத்தூய்மை உள்ளோர் பேறு பெற்றோர், ஏனெனில் வானுலகம்

அவர்களுடையதே" என்பன போன்றவை தரும் பொருளை உணர்த்தும் உள்ளடக்கமாக விளிக்கிறார். ஆன்மீகம், வாழ்வியல் கோட்பாடுகள், மதக்கருத்துகள், முக்கியமாக இந்துமத கருத்துகளை உள்வாங்கிக்கொண்டே இவற்றின் கலவையாக அஹிம்சைக்கு விளக்கம் தர முயல்கிறார். கோழைத்தனமாக இருக்கிறதே தங்களின் கூற்று என்ற கேள்விகள் பலரிடமிருந்தும் கேட்கப்பட்டிருக்கிறது. ஆனால், அஹிம்சை என்பது உயர்ந்த வீரம் என்கிறார். அஹிம்சையை பின்பற்ற ஒருவருக்கு ஆன்ம பலமும், அதிக வீரமும் வேண்டும் என்கிறார். எளிதில் வீழ்த்த முடிந்தவரிடம் காட்டுவதல்ல அஹிம்சை. தன்னால் வீழ்த்த முடியாதவரிடத்திலும் உண்மையாகவும், நேர்மையாகவும் அஹிம்சை வெளிப்படுத்தப்பட வேண்டும். உயிர்த்தியாகம் செய்யவும் தயாராக இருக்க வேண்டும். தன்னை பலி கொடுத்து பிறரை காப்பது அஹிம்சை என்கிறார்.

இயேசுநாதர் தான் மிகுந்த வதைகளுக்கு உட்படுத்தப்பட்டு, வலிகளை சுமந்து சிலுவையில் அறைந்து தொங்கிக்கொண்டிருக்கும் நிலையிலும், "தந்தையே..! இவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னியும்" என்று அவர்களுக்காக இறைஞ்சுதலை அஹிம்சைக்கு உதாரணமாக்குகிறார். பொய்யும் புரட்டும் இல்லாமல், உண்மையும் நேர்மையும் மிக்கவராக ஒருவர் தமது வாழ்க்கையில் அஹிம்சையை கடைபிடிக்க வேண்டும். குடும்பங்களில் அஹிம்சையை உண்டாக்குவதன் மூலம், எளிதாக மக்களுக்கு இதை புரியவைக்க இயலும் என்றும், அதன்மூலம் சமூகம் முழுக்க அஹிம்சை போய் சேரும். அப்போது இந்த உலகம் முழுக்க மிக அமைதியாக மக்கள் வாழ முடியும் என்று போதிக்கிறார்.

உண்மையில் நாடு விடுதலை அடைந்தது அஹிம்சையாலா என்கிற கேள்வி நமக்குள் எழாமல் இல்லை. பதில் ஆம் என்றால், இந்த போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்தும், புரட்சியில் ஈடுபட்டு நாடுகடத்தபட்டு இறந்தது அல்லது மரண தண்டணைக்கு உள்ளானவர்களின் வாழ்வியல் தியாகம், பொருளை இழந்து வறுமையை சகித்துக்கொண்டு, துன்பத்தில் வாழ்ந்தவர்களின் செயல்களுக்கு எல்லாம் ஏதும் மதிப்பில்லையா...? அவர்களுக்கு குறைந்தபட்ச அங்கீகாரம் கூட கிடையாதா...?? இரத்தம் சிந்தியவர்களின் தியாகங்கள் மதிப்பில்லாதவையா.??

சகித்துக்கொள்ள முடியாமலும், பொறுத்துக்கொள்ள முடியாமலும் இனி வேறு வழி இல்லை என்ற நிலையில் போராடி சாவதே மேல் என்று போராடியவர்களுக்கு நாடு என்ன மதிப்பும், மரியாதையும் செய்கிறது...? வெறும் அஹிம்சையால் மட்டுமே இந்த அற்புதம் நிகழ்ந்து விட்டதாக சொல்லபடுவதன் மூலம், இந்த உலகுக்கு நாம் சொல்லும் செய்தி என்ன...? என்கிற கேள்விகளுக்கு விடையற்ற நிலையில்.......... தொடர்கிறேன்.

நேதாஜி, அம்பேத்கர் போன்றோர் உயர்குடிகளாலும், உயர்ந்த நிலையில் இருந்தோராலும், ஆங்கிலேயருக்கு நெருக்கமாகவும், அதிகார மையத்தின் அடுத்த நிலையிலும் இருந்தவர்களால் அவமதிக்கப்பட்டும், அங்கீகாரம் மறுக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்ட நிலையிலும், ஒருவர் (நேதாஜி) நாட்டை விட்டு வெளியேறி, கடல்கடந்து தேசியப்படையை நாட்டுக்காக கட்டியமைத்து சாதித்த தலைவருக்கு இங்கே கிடைத்தது என்ன...? மற்றொருவர் (அம்பேத்கர்) உள்நாட்டுக் குழப்பங்களுக்கு மத்தியிலும், அடித்தட்டு மக்களுக்காக ஓடோடி உழைத்துக்கொண்டும், உலக தலைவர்களோடு தொடர்புகளை ஏற்படுத்தி விளிம்புநிலை எளிய மக்களும் வாழும் உரிமைக்காக போராடிய போராட்டங்களுக்கான அங்கீகாரம் மழுங்கடிக்கப்படுவது ஏன்...? என்ற கேள்விகளோடு நூலை படிக்கிறேன்.

மத கோட்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளமுடியாமல் பல இடங்களில் மோகன்தாஸ் திணறுவது நன்றாக தெரிகிறது.

அஹிம்சையை அனைத்துக்கும் மேலானது என்கிறார். சத்தியம், அஹிம்சை இரண்டையும் ஒப்பிட்டு பல இடங்களில் குறிப்பிட்டு இரண்டையும் பிரிக்க முடியாது என்கிறார். கடவுள் கோட்பாடுகளுடனும், சனாதன கோட்பாடுகளுடனும், சமூக கோட்பாடுகளுடனும் மோதிமோதி, மூன்றையும் ஒன்றாக கட்டி இணைத்து அதன் உயர்ந்த மூலப்பொருளாக அஹிம்சைதான் இருக்கிறது என்று சொல்ல விழைகிறார். டால்ஸ்டாய் உடனான தொடர்பினால், அறிவியல் கோட்பாடுகளையும் அஹிம்சையை விளக்க எடுத்துக்கொள்கிறார். பிரபஞ்ச விரிதலையும், அதன் நிலைப்பு தன்மையையும் அஹிம்சையோடு ஒப்பிடுகிறார்.

1914-ல் தொடங்கி மெல்ல மெல்ல 1948 வரையிலான போராட்டக்

காலக்கட்டத்தில் தான் கொண்ட இந்த கொள்கையை சமூகத்தின் மீது பரீட்சித்துப் பார்த்து அதில் ஓரளவு வெற்றி கண்டவதாகவும் அவரே குறிப்பிடுகிறார். முழுமையாக வெற்றி இல்லாவிட்டாலும் ஓரளவு வெற்றி கிடைத்தது மகிழ்ச்சி. முழுமையாக முயற்சி செய்வதன் மூலம் அனைத்தையும் அஹிம்சை மூலமாக அடையமுடியும் என்கிறார். நீங்கள் அஹிம்சையை அடைந்து விட்டால் அதன் மூலம் சத்தியத்தை அடைந்தவர்களாகிறீர்கள். இரண்டும் வேறுவேறு அல்ல. அஹிம்சை வழியாகத்தான் சத்தியத்தை அடைய முடியும் என்கிறார். தனி மனித உள்முக வளர்ச்சிக்கு, ஆன்ம பயிற்சிக்கு அஹிம்சைதான் தீர்வு என்கிறார்.

நூலின் இறுதி அத்தியாயங்களை நெருங்க நெருங்க ஓரளவு தெளிவு கிடைக்கிறது. அஹிம்சை என்பது அன்பு. அன்புதான் அஹிம்சை என்கிறார். அன்புதான் அஹிம்சை என்றால், அன்பு என்ற சொல்லாடலையே ஆரம்பத்திலேயே பயன்படுத்தி இருக்கலாமே. எதற்கு இந்த “அஹிம்சை” என்ற புதிய சொல்லாடல் என்ற கேள்வி மனதிற்குள் வந்து போவதை தவிர்க்க முடியவில்லை. அன்பே கடவுள் என்று இறுதியில் வந்துவிடுகிறார். இதில் முத்தாய்ப்பாக பகவத்கீதையை வைத்து அவரிடம் சில கேள்விகள் கேட்கப்படுகிறது. தான் தவிர்க்க விரும்பும் ஒன்றை, வேறு வழியில்லாமல் தவிர்க்கமுடியாமல் ஒரு பதிலை சொல்லி வைப்போம் பாருங்கள், அதுபோல நழுவியபடி சில பதில்களை தந்திருக்கிறார். இதில் ”பகவத்கீதையில் அஹிம்சை” என்ற தலைப்பில் இடைச்செருகலாக ஒரு அத்தியாயம் வேறு. அவர் அர்ச்சுணன், பகவான் கிருஷ்ணரை வைத்து போர்க்கள காட்சியையும், உரையாடலையும் கொண்டு தன்னுடைய அஹிம்சை வேறு என்பதை மறைமுகமாக சொல்லி இருக்கிறார்.

மொத்தத்தில், விருப்பு வெறுப்பு இன்றி இந்நூலை அணுகும் போது, அன்றைய சமுதாயம் இருந்த நிலை, அரசியல் நிலைப்பாடு, மதக்கலவரங்கள், மதத்தலைவர்கள் ஏற்படுத்திய ஆதிக்க குழப்பம், ஆங்கிலேயர் கொடுமைகள், கொள்ளைகளுக்கு மத்தியில் நாடு முழுக்க வலியும், வறுமையும், பசியும், பிணியும் கொண்டு அடிமையாகிக்கிடக்கும் நிலையில் இந்த மக்களுக்கும், நாட்டுக்கும் நம்மால் ஏதும் செய்துவிடமுடியுமா என்கிற வலிமிகுந்த ஏக்கமுடன், தன்னால் கனவிலும் கூட ஒருபோதும் எதிர்த்துவிட முடியாத மிகப்பெரும் பலம் கொண்ட எதிரியின் முன்னால், ஏதும் செய்ய முடியாமல் கையறு நிலையில் நிற்கும் ஒரு இளைஞனின் மனநிலையில் இன்று நாம் நின்று பார்த்தால்.....

அவர் எத்தனை வலிமிகுந்த நரக இரவுகளை கண்ணீரால் கழுவியபடி கடந்திருப்பார் என்பதும், இதை தவிர்க்கவும் முடியாமல், சகிக்கவும் முடியாமல், பொறுக்கவும் முடியாமல் உயிர் முழுக்க துள்ளத்துடிக்க வலியை சுமந்தவன் தொண்டைக்குள் சிக்கிய மீனின் முள்ளாக வாழ்க்கையை ஒருவன் எதிர்கொள்வது என்பதை நினைக்கவே குலைநடுக்கம் ஏற்படுவதை தவிர்க்க முடியவில்லை. அஹிம்சையை தன் வாழ்நாள் முழுக்க தூக்கிச்சுமந்தவன், அதையே தன் வாழ்க்கையாக்கிக் கொள்ளப் போராடிப் போராடி, இறுதியில் தானே அஹிம்சையாகி வாழ்ந்த மனிதன்தான் சொல்கிறான்.........................

“செய்...!! அல்லது செத்து மடி...!!”

**அகிம்சை என்பது என்ன?**
**மகாத்மா காந்தி**
**தையல் வெளியீடு / வ.உ.சி நூலகம்**
**பக்கம்-112 | விலை 70/-**



# “நாவலே உகந்த வடிவம்”

# எழுத்தாளர் சித்ரா சிவன்



**பரிவை சே.குமார்**

எழுத்தாளர் சித்ரா சிவன் பெரியகுளத்தைச் சேர்ந்தவர். இவர் எழுத்தாளர், சிற்றுளி காலாண்டிதழின் உதவியாசிரியர், தேனி மாவட்ட தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பெண்கள் கிளையின் மாவட்டத் தலைவர், நேர்காணல்கள் எடுப்பவர் எனப் பன்முகம் கொண்ட படைப்பாளி.

இவரின் முதல் நாவலான 'அத்தினி' பெண்களின் அக உலகையும், சுதந்திரத்தையும் மையமாகக் கொண்டது. இந்நாவலில் உமையாள், பவித்ரா தேவி மற்றும் சில பெண்களின் வாழ்க்கையும், உணர்வுகளும் மிகத் துல்லியமாக பேசப்பட்டிருக்கும். இந்நாவல் ஜீரோ டிகிரி நாவல் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்று பல முன்னணி எழுத்தாளர்களின் பாராட்டைப் பெற்றது.

இவர் இதுவரை கல்கி, விகடன், மங்கையர்மலர், தமிழ்வெளி, வாசகசாலை 'புரவி' இலக்கிய இதழ், படைப்பு தகவு இதழ், ராணி வார இதழ், வாரமலர், சிற்றுளி உள்ளிட்ட பல இதழ்களில் கவிதை, கட்டுரை, சிறுகதைகள், எழுத்தாளர்களின் நேர்காணல்களை எழுதியுள்ளார்.

இவர் அம்மு ராகவ் என்ற பெயரில் 'ஆதிலா' , 'ஔவையின் கள் குடுவை' என இரண்டு கவிதைத் தொகுப்புக்களையும் சித்ரா சிவனாக 'அத்தினி' என்ற நாவலையும் 'பொய்களுக்குத்தான் முழக்கங்கள் தேவை. உண்மை முனங்கினாலே போதும்' என்ற நேர்காணல் தொகுப்பையும் கொண்டு வந்திருக்கிறார்.

தனது ஆதர்ச எழுத்தாளர்களாக தி.ஜானகிராமன், ஜெயமோகன், அ. முத்துலிங்கம், தமிழ்நதி, இளம்பிறை, கலாப்ரியா, ச. தமிழ்செல்வன், ஆதவன் தீட்சண்யா ஆகியோரைச் சொல்கிறார் சித்ரா சிவன்.

ஸீரோ டிகிரி இலக்கிய விருது, ஜீவா நினைவு விருது, கருப்பு கருணா விருது, இலக்கிய சுடர் விருது, சௌமா இலக்கிய விருது உள்ளிட்ட விருதுகளைப் பெற்றிருக்கிறார்.



நமது கேலக்ஸியின் 'விண்மீன்' இதழுக்காக அவர் கொடுத்த நேர்காணலில் மிகச் சிறப்பாக பதிலளித்திருக்கும் எழுத்தாளர் சித்ரா சிவனுக்கு நன்றி.

**சித்ரா சிவனைப் பற்றிச் சொல்லுங்களேன்...**

**தே**னி மாவட்டம் பெரியகுளம் சொந்த ஊர். அப்பா சேகர், அம்மா கண்ணகிசெல்வி. கணவர் சிவன், குழந்தைகள் ஸ்ரீநிதி மற்றும் ஸ்ரீகுகன். வீட்டில் வாசிப்பு சார்ந்த சூழல் நிலவியதால் சிறுவயதிலிருந்தே புத்தக வாசிப்பு சாத்தியமானது. தொடர் வாசிப்பின் விளைவாக எழுத ஆரம்பித்தேன். முதலில் பெரும்பான்மையானவர்களைப் போலக் கவிதைகளே எழுதினேன்.

இதுவரை நான்கு நூல்கள் வெளிவந்திருக்கின்றன அம்முராகவ் என்ற புனைப்பெயரில் ‘ஆதிலா’, ‘ஔவையின் கள் குடுவை’ என இரு கவிதைத் தொகுப்புகள் வந்துள்ளன.




எழுத்தாளர்களை நான் எடுத்த நேர்காணல்களை தொகுத்து 'பொய்களுக்குத்தான் முழக்கங்கள் தேவை. உண்மை முனங்கினாலே போதும்' என்ற நேர்காணல் தொகுப்பும், 'அத்தினி' என்ற ஸீரோ டிகிரி விருது பெற்ற நாவலும் சித்ரா சிவன் எனும் எனது இயற்பெயரிலேயே வெளிவந்துள்ளன. தமுஎகச பெண்கள் கிளையின் தேனி மாவட்ட தலைவர். சிற்றுளி கலை இலக்கிய இதழின் உதவி ஆசிரியர்.

**கல்யாண்ஜி, வண்ணதாசன் என்பதைப்போல தாங்களும் கவிதைக்கு அம்முராகவ் கதைகளுக்கு சித்ரா சிவன் என வைத்திருப்பது எதனால்?**

**மு**கநூல் கணக்கிற்காக வைத்துக்கொண்ட பெயர் அம்மு ராகவ். அந்தப் பெயரில் கவிதைகள் எழுதுவேன், புத்தகம் வெளியிடுவேன் என்று நானே எதிர்பார்க்கவில்லை. என் வாழ்வில் திட்டமிடாமல் நிகழ்ந்தது தான் அனைத்தும். எழுத்தும் அவ்வாறே. அம்முராகவ் என்ற பெயர் எனக்கொரு தனித்த அடையாளத்தைக் கொடுத்தது. இப்போதும் அம்முவின் மீது அலாதிப் பிரியம் உண்டு. ஆனால் நாவல் எழுதும் போது சொந்தப் பெயருக்குத் திரும்ப வேண்டும் என்று தோன்றியது.

**கவிதை, சிறுகதை, நாவல் என எல்லா வடிவங்களிலும் இயங்குகிறீர்கள்... எந்த வடிவம் உங்களுக்கு சவாலாக இருக்கிறது?**


**பி**ற வடிவங்களோடு ஒப்பிட்டால் நாவலே ஒரு படைப்பாளிக்கு உகந்த வடிவம் என்று தோன்றுகிறது. ஏனெனில் கவிதையோ சிறுகதையோ ஒரு குறுகிய கால அவகாசத்தில் அதிலிருந்து வெளியேறிவிடலாம். ஆனால் நாவல் எழுதுவது ஒரு பெரும்வாழ்வை வாழ்ந்து முடிப்பது. சொந்த அனுபவத்திலிருந்தே இதைச் சொல்கிறேன்.

**பெண் எழுத்தாளராக பெண்கள் வாழ நினைக்கும் உலகத்தை மிகச் சிறப்பாக அத்தினியில் கொண்டு வந்திருந்தீர்கள். அதன் பின் பெண்களை முன்னிறுத்தி வேறேதும் நாவல் எழுதினீர்களா..?**

**எ**னது அடுத்த நாவலும் பெண் குறித்தது தான். அதற்கான கள ஆய்வில் இருக்கிறேன். இன்னும் கொஞ்சம் தரவுகள் கிடைத்ததும் விரைவில் எழுதத் தொடங்குவேன்.

**உமையாள், பவித்ரா தேவி போல் நிஜ வாழ்வில் பெண்கள் சுதந்திரமாக இருக்கிறார்களா..?**

**வி**திவிலக்குகள் நீங்கலாக எல்லோருக்கும் அது அசாத்தியமாகத்தான் இருக்கிறது. தங்கள் பலம் அறிந்து சுதந்திரத்தை அவர்களே எடுத்துக்கொண்டால் மட்டுமே சுதந்திரமாக இயங்க முடியும்





**தங்களின் சிறுகதைகள் பல பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. சமீபத்தில் 'வாசகசாலை'யில் வெளியான 'அணங்கு' வித்தியாசமான சிறுகதை என்று சொல்லலாம், நல்ல சிறுகதைகளைக் கைவசம் வைத்திருக்கும் தாங்கள் ஏன் இன்னும் சிறுகதைத் தொகுப்பு கொண்டு வரவில்லை?**

**சி**றுகதைகளைத் தொகுத்து செம்மையாக்கும் பணியில் இருக்கிறேன். இந்த வருடம் சிறுகதைத் தொகுப்பு வெளிவரும்.

**தாங்கள் நிறைய பெண் எழுத்தாளர்களை பேட்டி எடுத்து இருக்கிறீர்கள். அது தொகுப்பாகவும் வந்திருக்கிறது. பெண் எழுத்தாளர்கள் எல்லாம் தங்களுக்கு முன்னே இருக்கும் தடைகளை - அப்படி இருந்தால் - உடைத்துக் கொண்டு வந்து விட்டார்களா..? அல்லது இன்னமும் அதற்குப் பின்னே தயங்கி நிற்கிறார்களா..?**

குடும்பம் பெண்களுக்கு பாதுகாப்பை அளிக்கும் அதேவேளையில் கட்டுப்பாடுகளையும் எல்லைகளையும் வகுக்கும் நிறுவனமாக உள்ளது. அந்த அமைப்பு கிழித்து வைத்திருக்கும் கோடுகளைத் தாண்டிச் செல்லும் பெண்களுக்கு இயல்பாகவே நேரடியாகவும் கண்ணுக்குப் புலப்படாமலும் தடைகள் உருவாகின்றன. அவற்றை தாண்டிச் சென்றால் மட்டும் தான் அவளுக்கான உலகை உருவாக்கிக் கொள்ள முடியும். எழுத்துலகிற்கும் இது பொருந்தும்.




**தங்களின் ஆதர்ஷ எழுத்தாளர்களில் ஒருவரான தி.ஜாவின் நாவல்களில் வரும் பெண் நாயகிகள் பற்றிச் சொல்லுங்களேன்?**

அம்மா வந்தாள் அலங்காரத்தம்மாள், இந்து, மோகமுள் யமுனா, மரப்பசு அம்மிணி, சிலிர்ப்பு காமாட்சி, அகிலாண்டம், ஞானம் என தி.ஜானகிராமன் படைப்புகளில் வரும் பெண் நாயகிகள் வெறும் கதாபாத்திரங்கள் அல்ல; அவர்கள் ஒரு தனி மனஉலகம்.

அவர்களின் ஆசைகள், ஏக்கங்கள், தயக்கங்கள், காதல், கோபம், தியாகம் — எல்லாமே மிக நுணுக்கமான உளவியல் பார்வையுடன் எழுதப்பட்டிருக்கும்.

அவரது பெண்கள் பெரும்பாலும் மரபின் எல்லைகளை உடைத்து வெளியேற முயல்பவர்கள், உள்ளுக்குள் மிகத் தீவிரமான சுயத்தை கொண்டவர்கள். வெளியில் அமைதியாகத் தோன்றினாலும், அவர்களின் மனதில் இடைவிடாத அலைச்சல் ஓடிக்கொண்டே இருக்கும். அந்த உள் அசைவுகளை மிக மென்மையான மொழியில் எழுதியதில்தான் தி.ஜாவின் தனித்துவம் இருக்கிறது.

குறிப்பாக, காதலை அவர் பெண்களின் வழியாகப் பார்த்த விதம் மிகவும் அழகானது. அது வெறும் ரொமான்ஸ் அல்ல; ஒருவரை புரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆழமான ஏக்கம். அதனால்தான் அவரது பெண் கதாபாத்திரங்கள் வாசக மனதில் நீண்ட காலம் தங்கிவிடுகின்றன.

அவருடைய பெண்கள் முழுமையான "நல்லவர்கள்" அல்ல; அதேபோல் "தவறானவர்கள்" என்றும் இல்லை. முரண்களும் பலவீனங்களும் நிறைந்தவர்களாக இருந்தும் அவர்கள் மீது வாசகர்களுக்கு மரியாதையே தோன்றுகிறது. தி.ஜா கருணையோடு அக்கதாபாத்திரங்களை கையாண்டிருப்பதே முக்கியக் காரணம்.

தமிழ் இலக்கியத்தில் பெண்களின் உள் மனதை இவ்வளவு மென்மையாகவும் மரியாதையுடனும் எழுதிய எழுத்தாளர்களில் முக்கியமானவர் தி.ஜா என்று நான் நினைக்கிறேன்.

**விருதுகள் நம் எழுத்தை மேம்படுத்தும், அதன் எல்லைகளை விரிவுபடுத்தும் என நினைப்பதுண்டா..? உண்டு எனில் காரணத்தைச் சொல்லுங்களேன்.**

**வி**ருதுகள் வழியாக எழுதுபவர்கள் அங்கீகரிக்கப்படுகிறார்கள். அது எழுத்தின் வழியாக கிடைத்ததே அன்றி எழுத்தே அதன் வழியாக மேம்படும் என்பது பொருந்தாக் கூற்றாக உள்ளது. தீவிரமாக வாசிப்பதன் மூலமும் தொடர்ந்து எழுதுவதன் மூலமும் தான் எழுத்து மேம்படும் என நம்புகிறேன். விருதுகள், பரிசுகள் போன்றவை ஊக்கமூட்டும் முன்னிலைகளாக வேண்டுமானால் இருக்கலாம்.



**காலாண்டிதழின் உதவியாசிரியர், தமுஎச பெண்கள் கிளையின் தேனி மாவட்டத் தலைவர், எழுத்தாளர் என சுற்றிச் சுழலும் பணிகளை எப்படிச் சமாளிக்கிறீர்கள்..?**

எழுத்து எனக்கு வேலை அல்ல; அது என் ஆர்வம். அதனால் இந்தப் பொறுப்புகள் தனித்தனியாகத் தெரியவில்லை. காலாண்டிதழ் பணியில் வாசிப்பும், புதிய குரல்களைத் தேடுவதும் நடக்கிறது. தமுஎகச பெண்கள் கிளைச் செயல்பாடுகள் மனிதர்களை நெருக்கமாக அறிய உதவுகின்றன. அந்த அனுபவங்களே எழுத்தாகவும் மாறுகின்றன.

நேரத்தைப் பிரித்து வைத்துக் கொள்வதைவிட, மனதைச் சிதறவிடாமல் வைத்துக் கொள்வதே முக்கியம் என்று நினைக்கிறேன். எல்லாவற்றையும் முழுமையுடன் செய்ய முடியாத நாட்களும் உண்டு. ஆனால் பெண்கள், இலக்கியம், சமூகப் பணி — இவை மூன்றும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவையாக இருப்பதால் சோர்வைக் காட்டிலும் அர்த்தம்தான் அதிகமாக உணரப்படுகிறது.

**தற்போது எழுதும் எழுத்தாளர்களில் தங்களைக் கவர்ந்தவர்கள் யார்? ஏன்?**

ஒரே பெயரைச் சொல்லிவிட முடியாத நிலைதான் இன்று தமிழ் இலக்கியச் சூழலில் இருக்கிறது. புதிய கதைக்களங்கள், வித்தியாசமான கதைக்கருக்கள், நாவல் மற்றும்

சிறுகதைகளின் மரபான வடிவமைப்புகளை உடைத்து மேற்கொள்ளப்படும் புதுமையான முயற்சிகள்—இவை அனைத்தும் சமகால எழுத்தை மிகுந்த உற்சாகத்துடனும் எதிர்பார்ப்புடனும் வாசிக்கத் தூண்டுகின்றன.

சமீபத்தில் ஆதிரன் எழுதிய 'மாயக்கண்ணி' சிறுகதைத் தொகுப்பை வாசித்தபோது, அந்த அனுபவம் நீண்ட நேரம் மனத்திலிருந்து அகலவில்லை. மொழியின் மயக்கம், கற்பனையின் பரப்பு, கதைகளின் உள்ளார்ந்த உளவியல் ஆழம்—இவை அனைத்தும் சேர்ந்த அந்தத் தொகுப்பு, உலகச் சிறுகதைகளின் வரிசையில் வைத்து பேசப்பட வேண்டிய படைப்பு என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. அதேபோல் கரன் கார்க்கி, நரன், என். ஸ்ரீராம், திருச்செந்தாழை, மயிலன் ஜி. சின்னப்பன், கே.என்.செந்தில், சரவணன் சந்திரன், ப்ரிம்யா கிராஸ்வின், லாவண்யா சுந்தர்ராஜன், அனுராதா ஆனந்த் ஆகியோரின் எழுத்துகளும் என்னை ஆழமாகக் கவர்ந்தவை.

ஒவ்வொருவரும் தனித்தனி மொழிநடையுடனும், வாழ்வைப் பார்ப்பதற்கான தனிப்பட்ட அகநோக்குடனும் எழுதுகிறார்கள். அவர்களின் கதைகளில் வாழ்க்கையின் புதிர்கள் மட்டுமல்ல, மொழியின் புதிய சாத்தியங்களும் திறக்கப்படுகின்றன.

விண்மீன் மின்னிதழ்

உண்மையில், இது முடிவடைந்த பட்டியல் அல்ல. தொடர்ந்து வாசித்துக்கொண்டே இருக்கும்போது, இந்தப் பட்டியலில் புதிய பெயர்கள் இணைந்துகொண்டே இருக்கும் என்பதே சமகால இலக்கியத்தின் மிகப் பெரிய நம்பிக்கை.

**எழுதும் போது அந்த படைப்பு அடுத்தக் கட்டத்திற்குச் செல்லாமல் பாதியிலேயே நின்று விடும் போது தடுமாறியதுண்டா?**

**இ**ந்தப் பிரச்சினையை எதிர்கொள்ளாத எழுத்தாளர்கள் அநேகமாக இருக்க மாட்டார்கள் என்றே நினைக்கிறேன். அப்படி நடக்கும் போது சிறிது காலத்திற்கு அதைத் தொடாமல் விலகி இருப்பது நன்மையில் முடியும். அந்த சிறிது காலம் என்பது சிலருக்கு சில தினங்களாகவோ இன்னும் சிலருக்கு வாரங்களாகவோ பிறருக்கு மாதமாகவோ கூட இருக்கலாம். பிறகு எழுதினால் அந்தச் சிக்கல் சாதாரணமாகத் தீர்ந்து விடுவதை உணரமுடியும்.




**புதிதாக எழுத வரும் எழுத்தாளர்களுக்கு தாங்கள் கூறும் வழிமுறைகள் என்ன?**

**இ**தற்கு பதில் சொல்ல எழுத்தில் நெடுந்தொலைவு சென்றிருக்க வேண்டும். எனவே பின்னொரு காலத்தில் இக்கேள்விக்கு பதில் கூறுவேன் என நினைக்கிறேன்.

அறிவுரை என்றில்லாமல் வழிமுறை என்று கேட்டிருப்பதால் நான் பின்பற்றுவதை சொல்கிறேன்.

"எழுதிவிட்டோம்" என்ற உடனடி திருப்திக்குள் விழுந்துவிடாதீர்கள். எழுத்து என்பது முதலில் பிறப்பதல்ல, தொடர்ந்து செம்மையடைவதுதான் அதன் உண்மையான வடிவம். எழுதியதை மீண்டும் மீண்டும் வாசியுங்கள்; தேவையற்ற சொற்களை நீக்குங்கள்; வாக்கியங்களை செதுக்குங்கள்; உங்கள் எழுத்தின் மீது நீங்களே கடுமையான வாசகராக இருங்கள். ஒரு நல்ல எடிட்டிங் பல நேரங்களில் சாதாரணமான எழுத்தையும் நினைவில் நிற்கும் படைப்பாக மாற்றிவிடும்.

அடுத்ததாக எல்லோரும் சொல்வதுதான்... நிறைய வாசிங்க. போதுமான வாசிப்பனுபவம் இல்லாதவர்கள் கதை எழுத வரும்போது அவர்களின் ஒரு சிறுகதையை வாசித்தாலே தெரிந்து விடுகிறது எழுத்தின் போதாமை. உண்மையில் வாசிப்பின் மூலம் புதிய சொற்களைக் கண்டடைதல், வாக்கிய அமைப்பு, ஒவ்வொரு எழுத்தாளரும் கையாளும் தனித்துவமான மொழிநடை என நிறைய விசயங்களை கற்றுக்கொள்ளலாம். புதிதாக எழுத வருபவர்களுக்கு அவர்கள் வாசிக்கும் ஒவ்வொரு புத்தகமும் ஒரு நல்ல ஆசான் தான் .

# காலாவதி

காளியம்மன் கோயிலுக்கு வருசா வருசம்
தீச்சட்டி எடுக்கும் கவிதா மதினிக்கு
மாலை வாங்கிப் போடுவதே
செந்திலண்ணாவின் வேலை.

கல்யாணம் முடிச்சு வெளியூர் போனாலும்
தீச்சட்டி எடுக்க உள்ளூர் வரும்
மதினியை எதிர்பார்த்தே நாடக மேடையில்
செந்திலண்ணா தவமிருக்கும்.

மதினியோடு
முப்பது வருசமா பேச்சுவார்த்தையில்லை.
அண்ணனுக்கும் சொல்லும்படியான
வருமானமில்லை.

மதினிக்கும் வயசாகிப் போனது....
இருந்தாலும்
எதிர்பார்த்தே செந்திலண்ணா காத்திருக்கும்.
மேலத்தெருவிலிருந்து
கொட்டுமேளம் முழங்க தீச்சட்டி தூக்கி
ஆவேசமாக ஆடிக்கொண்டே வந்த மதினிக்கு...

கடன் வாங்கி மாலை போட்ட
செந்திலண்ணாவைப் பார்த்து நாக்கைத் துருத்தி
"என்ன வேணும்?" எனக்கேட்ட மதினியைப் பார்த்து
கையெடுத்துக் கும்பிட்டு ஒதுங்கினார்....

வரங்களேயானாலும்
காலங்கடந்து கிடைத்தால் காலாவதிதானே.

விண்மீன் மின்னிதழ்

இரா. தங்கப்பாண்டியன்,
கடமலைக்குண்டு

# விதிவிலக்கற்ற 24

என்றுமே மங்காத
இயற்கை வளமும்!
ஆற்றல் பெருகிய
உடலும் மனமும்!
அழியா இக்கொடையுடன்
அவனிதனில் வாழும் மனிதா..!

காலைக் கதிரவன்
மாலையில் மறைந்து
மறுநாள் உதித்திடும்
வேளை வரையினில்
அனைவருக்கும்...
பேதமே அல்லாத
ஒரே நேரம் தான்..!

விண்மீன் மின்னிதழ்

ஒரு செயலில்...
வெற்றிக்கும் தோல்விக்கும்
வரையறைகளின்
தாக்கம் ஒன்று தான்..!
ஒரு நாளில்...
உனக்கும் ஏனையோருக்கும்
நிமிடங்களின்
நீதி ஒன்று தான்..!

பேதமற்ற எல்லை ஒன்றே!
விதிவிலக்கற்ற நேரமும் ஒன்றே!
பயன்படுத்துவோம் நன்றே!

நன்னு,
கூடுவாஞ்சேரி, சென்னை

# கதை சொல்லப்போறேன்

அப்புசிவா, ஆத்தூர்

**கை**யில் இருந்த 'பை சைக்கிள் தீவ்ஸ்' திரைக்கதைப் பிரதியை மீண்டும் ஒரு முறை புரட்டினான் வெற்றி.

அதுதான் அவனது சினிமா ஆசையின் மூல ஆதாரம். எத்தனை தடவை படித்திருப்பான், அந்த படத்தை எத்தனை தடவை பார்த்திருப்பான் என்பதை எண்ணவே முடியாது. அதன் எதிரொலியாகத்தான் தன் முதல் குறும்படத்தை எடுத்தான். பிரபல தொலைகாட்சி சேனலில் சிறந்த குறும்பட இயக்குநராக தேர்ந்தெடுக்கப்பட்டான். சிலபல மீடியா பேட்டிகளில் பேசினான். தற்போது பிரபல தயாரிப்பாளரான ஜேகேடியின் அழைப்பின் பேரில் கதை சொல்ல வந்து காத்துக்கொண்டிருக்கிறான்.

பெரிய அலுவலகம் அது. அதன் பிரமாண்டம் மலைக்கச்செய்தது. ரிஷப்சன் பெண்ணின் அலட்சியம் அவனை எதுவோ செய்தது. 'தவறில்லை, தன்னைப்போல தினமும் எத்தனை பேரை பார்த்திருப்பாள்' என்பதும் உரைத்தது. அரைமணி நேர காத்திருப்பின் பின் அந்த ஆள் வந்தார்.

"மிஸ்டர் வெற்றி?" லேசான வழுக்கை, லேசான தொப்பை, இன் செய்திருந்தார். ஐம்பது வயது இருக்கலாம்.

"ஆமா சார்" என்று எழுந்தான்.

"வாங்க, நான் சாரோட பிஏ. மகேந்திரன். சார் உங்களை உள்ள காத்திருக்கச் சொன்னார். கொஞ்ச நேரத்தில் வந்துடுவார்" என்றவர் ரிஷப்சனிஸ்ட்டிடம் திரும்பி, "சார் பிரபல குறும்பட இயக்குநர், ரொம்ப ஃபேமஸ்... நீ அந்த படம் பாத்திருக்கியா?" என்றார்.

"இல்ல சார், யார் ஹீரோவா நடிச்சாங்க?" என்றாள்.




அவளுக்கு எதுவும் பதில் சொல்லாமல் வெற்றியுடன் அந்த அறைக்குள் நுழைந்து உட்காரச்சொன்னார் மகேந்திரன். அழகிய அறை. ஆஜானுபாகுவான காட்பாதர் டைப் சேர். அதுதான் ஜேகேடியின் சீட் என்பது புரிந்தது. பின்னணியில் நிறைய ஷீல்டுகள், சுவர்களில் சார்லி சாப்ளின், என்எஸ்கே, எம்.ஆர்.ராதா புகைப்படங்கள்.

“சுத்த மக்கு அந்தப் பொண்ணு, என்ன படம் பிடிக்கும்னா பாடாவதி படத்தை சொல்லி பாராபாராவா பேசும்” என்று சொல்லி சிரித்தார். வெற்றியும் அளவாக சிரித்து வைத்தான்.

“அப்புறம்? என்ன மாதிரியான கதையை செலக்ட் பண்ணியிருக்கீங்க? நீங்களே கதையா? இல்லை யாராவது கதாசிரியர் இருக்காங்களா” கேட்டார் மகேந்திரன். அப்படியே அருகே இருந்த இண்டர்காம் எடுத்து காஃபி எடுத்துவரச் சொன்னார்.

“அய்யோ, இல்லல்ல சார், என் சொந்த கதைதான்” என்றான் வெற்றி பதட்டமாக.

அவனின் பதட்டத்தை கவனித்த மகேந்திரன் சொன்னார், “இதுக்கேன் இவ்ளோ பதட்டம்? உங்களுக்கு கதை எழுத வந்தா ஒகேதான். புதுசா வரவங்க எப்பவும் தனக்குன்னு ஒரு கதையை ரெடி செஞ்சுட்டுதான் டைரக்சனுக்குள்ள இறங்குவாங்க. ஆனா பாருங்க, கதை எழுதுவது வேற, திரைக்கதை வேற… இதையெல்லாம் திரையில் கொண்டு வரும் டைரக்சன் வேறதான். இதை நெறய பேரு புரிஞ்சுக்கிறதில்லை. உலகப் புகழ்பெற்ற பல படங்களோட கதாசிரியர் வேறதான் தெரியுமா?” என்று சிரித்தார்.

சற்றே விபரமானவர் என்பது புரிந்து மெல்ல சிரித்தான் வெற்றி.

காஃபி வந்தது. அருமையான காஃபி. அருந்தியபடி பேசினார் மகேந்திரன்.

“கதையை சொல்றீங்களா? கட்டாயமில்லை. ஆனா சார் வரும்போது அவர்கிட்ட சொல்ல உங்களுக்கு ஒரு ட்ரையல் மாதிரி இருக்கும்ல, இஷ்டம் இல்லைன்னா வேணா”

“அச்சோ, சொல்றேன் சார்…”

“ம்”

“ஒரு கிராமம் சார், ஒரு சின்ன பையன். படிக்கவே சிரமம். கிழிஞ்ச யூனிஃபார்ம்தான். அவனுக்கு ஒரு ஆசை. புது சட்டை வாங்கி போடணும்னு”

“சில்ட்ரன்ஸ் ஆஃப் ஹெவன் போல இருக்கே…”

“இல்ல சார், இது நம்ம ஊரு கதை. வேற மாதிரி போகும். அவனோட ஏழ்மையை படிப்படியா பதிய வைக்கிறோம். அப்புறம் அவங்க குடும்பத்துக்கு ஒரு வாய்ப்பு வருது. அதிலே நிறைய சவால்கள், ஏமாற்றங்கள், அவங்க அப்பா சந்திக்கும் துரோகங்கள்… கடைசியா ஜெயிக்கிறாங்க”

“உங்க கையில் இருக்கிற புக் பாக்கும்போதே நினைச்சேன். அதே கதைதான். ஆனா முடிவு சுபமா முடிக்கிறீங்க”

“கொஞ்சம் கொஞ்சம் தழுவல் சார். அதாவது சாயல்தான். காப்பி இல்லை. ஆனா கதை முழுக்க எங்க கிராமத்தில் பார்த்த சம்பவங்கள், நிகழ்வுகள் எல்லாமே வரும். முக்கியமா ஒரு சீன் கூட போரடிக்காம அழகா வேகமா போகும். அடுத்து என்ன என்னன்னு சீட் எட்ஜ் மூவி நகர்வதைப்போல ஸ்கிரீன்ப்ளே பண்ணியிருக்கேன்”

“குட், அதான் அழகு” என்றவர், கதவு திறக்கும் சத்தம் கேட்டு பதறி எழுந்தார். வெள்ளை சட்டை, கருநீல சூட் உடன் உள்ளே நுழைந்தார் ஜேகேடி. புகைப்படங்களில் பார்த்ததைவிட சிவப்பாக இருந்தார். அதைவிட குண்டாக இருந்தார். கூடவே இரண்டு இளைஞர்களும் நுழைந்தனர். வெற்றி எழ முனைய, அவன் தோளைத்தொட்டு உட்கார வைத்து, தன் ஆஜானுபாகுவான சீட்டில் ஆரோகணித்தார் ஜேகேடி.

“அப்புறம்? தம்பி எப்படி இருக்கீங்க? உங்க படம் பார்த்தேன். செம்மயா பண்ணியிருக்கீங்க, இப்போ எல்லாம் குறும்பட இயக்குநர்கள்தான் இண்டஸ்ட்ரியில கலக்குறாங்க. அதான் உங்களை செலக்ட் பண்ணினேன்” என்றார்.

“ரொம்ப நன்றி சார், மகேந்திரன் சார்கூட சொன்னார்” என்று சொன்னவுடன், “மகேந்திரன்… சாரா…” என்று அவரை முறைத்தார் ஜேகேடி. ஜேகேடிக்கு காஃபி ஊற்றிக் கொடுத்துவிட்டு மீண்டும் தன் கைகளை கட்டியபடி தலைகுனிந்தபடி இருந்தார் மகேந்திரன். சீட் இருந்தும் அவர் உட்காரவில்லை.

“சரி சரி, கதை இருக்கா உங்ககிட்ட?” கேட்டார் ஜேகேடி.

“இருக்கு சார்” என்றான் வெற்றி.

“ம்… ஆரம்பிங்க” என்று சொன்னவர், அருகில் உட்கார்ந்திருந்த அந்த இளைஞர்கள் புறம் திரும்பி “ஜோ, செல்வா இவர் சொல்லச்சொல்ல நோட் பண்ணுங்க” என்றார்.

வெற்றி கதையை சொல்லச்சொல்ல கேட்டுக்கொண்டே வந்தவர், அருகில் இருந்த மகேந்திரனை முறைக்க ஆரம்பித்தார். அந்த ஜோவும், செல்வாவும் நோட் பண்ணுவதை விட்டுவிட்டு தங்களுக்குள் முணுமுணுவென பேசி சிரிக்க ஆரம்பித்தனர்.

“கதை போதும் வெற்றி, உங்ககிட்ட வேற மாதிரி எதிர்பார்த்தேன்” என்றார் ஜேகேடி.

“சார்… வேற மாதிரின்னா?”

“என்னா மகேந்திரா, எதுவும் சொல்லலையா, இவ்ளோ நேரம் கதை அடிச்சுட்டு இருந்தியா… வெற்றி, இந்த மகேந்திரன் இப்படித்தான் கிராமம் அது இதுன்னு கதை சொல்ல வந்தான். அது எல்லாம் எண்பதுகளோட போச்சு. அப்புறம் எங்கிட்டயே உதவியாளரா சேர்ந்துகிட்டான். நான் எதிர்பார்க்கிறது ஒரு பான் இண்டியா படம்”

“சார், பான் இண்டியா படம்னா… வந்து பிரமாண்டமாவா?”

“ஆமாபா, தோ இவனுங்க என் அண்ணா பசங்க. இவங்களுக்கும் இயக்குநர் ஆக ஆசை. இந்த ஜோ நல்லா நடிக்கவும் செய்வான். பயன்படுத்திக்கலாம். இந்தியாவில் இதுவரை இல்லாத வகையில் செலவு பண்ணி படம் எடுக்கணும் நாம”

“அதுக்கு நான்…”

“அதான் ஜேகேடி. இதுபோல எடுக்க பிரபலமான காஸ்ட்லி இயக்குநரை செலக்ட் பண்ணுவாங்க. இந்தியாவிலேயே முதல் தடவையா ஒரு புதுமுக இயக்குநரை வச்சி உலகமே வியக்கும் அளவு ஒரு பான் இந்தியா படம் எடுத்து ஜெயிக்க வைக்கப்போறான் இந்த ஜேகேடி”

“கதை…?”

“நீங்க மூணு பேருதான் கதை பண்ணப்போறீங்க… ஜோ நீ ஆரம்பி” என்றார் ஜேகேடி.

“முதல் சீன்லயே கருகும்முனு இருட்டு, அப்போ ஒரு வெளிச்சம் வருது. ஒரு ஹெலிகாஃப்டர்ல இருந்து ஒரு உருவம் இறங்குது… அதாவது ஒரு லேடீஸ் ஹாஸ்டல் வாசல் அது. இறங்கிய உருவம் முழு ஓவர் கோட் போட்ருக்கு. தொப்பி. கூலிங்க்ளாஸ். கையில் ஒரு கத்தி. நீளமா சாமுராய் படத்தில் வருமே… அதுபோல. இறங்கிய உருவம் அந்த ஹாஸ்டல் வாட்ச்மேனை அப்படியே கழுத்தை சீவுது. தலை தனியா பறக்குது. அப்போ தெறிக்கிற ரத்தத்துளியில் டைட்டில் ஆரம்பிக்குது”

“செம்ம, அதுதான் ஹீரோவா?” என்றார் ஜேகேடி.

“யார் சார்? வாட்ச்மேனா?” என்றான் வெற்றி. அவன் பிரமிப்பில் இருந்தான்.

“கவனி வெற்றி. நல்லா கவனி. அது யாருன்னு இப்போ சொல்லப்போறதில்லை. அதான் டிவிஸ்ட்… நீ சொல்லு ஜோ”

“அப்புறம் டைட்டில் முடிஞ்சு கதை ஆரம்பம். ஹீரோ ஒரு அயர்ன் கடை வச்சிருக்கார்.”

“யார் போடலாம்னுகூட முடிவு பண்ணியாச்சு. திவாகர்தானே” ஜேகேடி.

“சார், அவர் ஒரு படத்துக்குக்கே நூறுகோடி கேட்பார் சார். நான் வெறும் பத்துகோடியில் படமே முடிச்சுடுவேன்” என்றான் வெற்றி.

“நீ பெரிய ஆளா வர வழி காட்டறேன் வெற்றி. உன் பெயர்தான் இப்போதைக்கு எனக்கு வேணும். நீ சும்மா கவனி. திவாகர் நூறுகோடியா, நூற்று ஐம்பது கோடி கொடுத்து அவனை புக் பண்றோம்” என்றார் ஜேகேடி.

வெற்றிக்கு மயக்கம் வரும்போல இருந்தது. மகேந்திரன் எதுவும் பேச வேண்டாம் என கண்காட்டினார். செல்வா ஆரம்பித்தான்.

“உண்மையில் அயர்ன் கடை ஒரு மறைப்புதான். முன்னாடி ஒரு போர்வை போட்டு அந்த கடை ஒரு மறைப்புன்னு மறைமுகமா சொல்றோம். அந்த கடைக்கு முன்னாடி ஒரு இட்லி கடை இருக்கும். இட்லிகடைக்காரரா ஜிபிஎம் நடிக்க இருக்கார். இப்போ தெலுங்கு கன்னடம்னு அவர்தான் ஃபேமஸ். அவரு எப்படியும் ஐம்பது கோடி கேட்பார்.”

“அவர் எதுக்கு?” மகேந்திரன் கேட்க அவரை முறைத்தார் ஜேகேடி.

“அவங்க ரெண்டு பேரும் நண்பர்கள். ஆனா பாதி படம் வரை சண்டை போட்டுட்டுதான் இருப்பாங்க. இண்டர்வெல் பிளாக்லதான் அவங்க நண்பர்கள்ன்னே வெளியே சொல்றோம். அடுத்த டிவிஸ்ட் இது” அடுத்து ஜோ ஆரம்பித்தான்.

“என்ன விஷயம்னா, அவங்க இருக்கிற ஊருக்கு அவங்க பாதியில்தான் வந்தாங்க. அதுக்கு முன்ன என்ன பண்ணினாங்க, எப்படி இருந்தாங்க அப்படிங்கிறதெல்லாம் ஃப்ளாஷ்பேக்ல சொல்றோம். அது பின்னாடி வரும். அந்த ஊருக்கு ஏன் வராங்கன்னா, அங்கேதான் வில்லன் பாதாளஉலகம் போல தோண்டி அங்கே போதைப்பொருள், தங்கக்கடத்தல் பொருள் எல்லாம் மறைச்சு வைச்சிருக்கான். வில்லனை யாருமே பார்த்தது இல்லை. பத்து வருஷமா அவனை பிடிக்கதான் இவங்க மறைஞ்சு இருக்காங்க”

“பாதாள உலகம் போல செட்டுக்கு ஒரு நூறு கோடி ஆகுமா” கேட்டார் ஜேகேடி.

“அவ்ளோலாம் ஆகாது, கம்மியா ஒரு தொண்ணூறு ஆகலாம்” என்றான் ஜோ.

“ம், நூற்று ஐம்பது, ஒரு ஐம்பது ஒரு தொன்னூறு... இன்னும் இருநூற்று பத்துக்கு வழி சொல்லுங்க. ஐநூறு கோடி பட்ஜெட்” என்றார் ஜேகேடி.

“அந்த பாதாள உலகத்தில் ஒரு ஆயிரம் பேரு கொத்தடிமையா இருக்காங்க. வாரம் ஒருதடவைதான் சாப்பாடு. அதிலே ஹீரோவின் மகனும் இருக்கான்.” என்றான் செல்வா.

“இதான் முக்கியம், சென்டிமெண்ட் கலக்கணும்” ஜோ

“ஆமா, அப்புறம் ஹீரோயின் கிடையாது. இதிலயும் புதுமையா பண்றோம். ஹீரோகூட பாதாள உலகத்தில் டான்ஸ் ஆட ரெண்டு மாடல் செலக்ட் பண்ணிக்கலாம். அவங்களுக்கு கொஞ்சம் செலவு ஆகலாம்” என்றான் செல்வா.

“ஹீரோ இண்டர்வெல் முடிஞ்சு அதகளம் பண்றார். பாதாள உலகம் நுழையும் வழி இலங்கையில் இருக்கு. அங்கிருந்து கடல் வழியா பாதாளம் தோண்டி இங்க வந்து சேருது. அந்த வழியோட வரைபடம் லண்டன்ல இருக்கு. லண்டன்ல இருக்கும் டான் கேரக்டர்க்கு வடக்கத்திய ஹீரோ, இலங்கையில் வழியின் காவலுக்கு தெலுங்கு ஹீரோ, அப்புறம் காஷ்மீர்ல இருந்து சைனால இருந்து ஹெலிகாப்டர்ல ஹீரோவோட ஃப்ரெண்ட்ஸ் உதவிக்கு வராங்க. மொத்தம் ஒரு முன்னூறு தலையாவது உருளும். கதை முழுசும் இரவில்தான் நடக்கும். சிவப்பு கலருக்கு, அதான் ரத்தத்துக்கு மட்டும் ஐம்பது டேங்கர் லாரி தேவைப்படும்” என்றான் செல்வா.

“என் மகன் இசைன்னு போட்றலாம். அவனுக்குதான் அதில் ஆர்வம் இருக்கே. சும்மா பிஜிஎம் காதை பிளக்கணும். பாட்டுக்கு எதாவது பாத்துக்கலாம். பின்னாடி எதாவது பழைய பாட்டை ஓட விட்றலாம்” என்றார் ஜேகேடி.



“உலகமே அலறணும்” என்றான் ஜோ. வெற்றியின் மண்டைக்குள் ஏதேதோ பிரளயங்கள் நடந்தன.

“ஆனா, கதை ஏதோ இடிக்குதே” என்று மகேந்திரன் சொன்னதுதான் தாமதம், படாரென எழுந்து தன் முன்னால் இருந்த காஃபி கோப்பையை தூக்கி அவர் மேல் எறிந்த ஜேகேடி, “வெளிய போ நாயே, எப்பவும் உனக்கு ஜீனியஸ்னு நெனப்பு” என்றார். தலையை குனிந்தபடி வெளியேறினார் மகேந்திரன்.

“உனக்கு சம்பளமா ஒரு பத்து கோடி கொடுத்திடறேன் வெற்றி” என்றார் ஜேகேடி.

வெற்றி வெளியே வரும்போது வாசலில் காத்திருந்தார் மகேந்திரன். பேயடித்தார்போல இருந்த வெற்றியின் தோளில் கைபோட்டு பேசினார்.

“மனசை தளரவிடாதே வெற்றி. இதை ஒரு வாய்ப்பா பயன்படுத்திக்கோ. பேர் முதலில் வெளிய வரட்டும். அப்புறம் நீ நினைச்ச மாதிரி பண்ணலாம். பான்இந்தியா படம்னா என்னன்னே தெரியாத ஜென்மங்க. ரத்தவெறியை மனுஷன் மனசுல திணிக்கிறதுதான் இவனுங்க பான் இந்தியா படம். இந்தியா முழுக்க ரசிச்ச ஷோலே, தில்வாலே, பதேர் பாஞ்சாலி எல்லாம் பான் இந்தியா படம்தான். உணர்வு எல்லோருக்கும் பொதுவா இருக்கும். நீ அவசரப்படாதே.

காத்திரு. என்னைப்போல் வீணாகிடாதே” என்றார்.

முழுதாக ஒரு வருடம் படப்பிடிப்பு நடந்தது. ஐநூறு கோடியில் இருந்து எழுநூறு கோடி ஆகியது பட்ஜெட். ப்ரோமோஷனுக்கு ஹாலிவுட் ஸ்டார்கள் எல்லாம் வந்து திவாகரையும், ஜேகேடியையும் புகழ்ந்துவிட்டு கிளம்பினார்கள். டிக்கட் விற்பனை விர்ரென எகிறியது. இருபது மாநில முக்கிய நடிகர்கள் நடித்த பான் இந்தியா படமான “தீ....ர்த்துக்கட்டு” ரிலீஸ் ஆகியது.

இரண்டாம் நாள்,

ஜேகேடியின் அலுவலகம்.

ஜேகேடி சீட்டில் இருந்தார். அவர் முன்னால் ஜோவும், செல்வாவும் இருந்தார்கள்.

“என்னதான் ஆச்சு ஜோ?” என்றார் ஜேகேடி.

“முழு உழைப்பையும் கொட்டிதான் எடுத்தோம். டிவிஸ்ட் எல்லாமே கைதட்டிதான் ரசிச்சாங்க” என்றான் ஜோ.

விண்மீன்

“ஏதோ சின்ன தப்பு... அதான் புரியலை” என்றான் செல்வா.

“எவ்ளோதான் வசூல்? ஆயிரம் கோடி ப்ளான். ஒரு பாதியாவது தேறுமா?”

“ஐம்பது வந்திருக்கு... அதுவும் டிக்கட் புக்கிங்னால”

“அப்போ இனிமே...?” ஜேகேடி.

எதுவும் பேசவில்லை ஜோவும், செல்வாவும்.

“சரி அதைவிடு, அந்த மகேந்திரன் ஏதோ கிராமத்து படம் எடுத்தானே, அது என்ன கதை?” கேட்டார் ஜேகேடி.

“ரெண்டே மாசத்தில் எடுத்திருக்கான். அது ஏதோ கிராமத்து கதை. ஒரு சின்னப்பையன் சட்டை வாங்க...” ஜோ சொல்ல குறுக்கிட்டார் ஜேகேடி.

“இருஇரு... இது... நம்ம வெற்றி அன்னிக்கு சொன்ன கதைபோல இருக்கே? அந்த மகேந்திரன் ஒட்டுகேட்டு எடுத்திருக்கான். எப்படி போகுதாம்”

“போனவாரம் ரிலீஸ். இதுவரை நூறுகோடி வசூலாம். இன்னும் ஹவுஸ்ஃபுல்லாம்... முன்னூறு தாண்டும்னு சொல்றாங்க”

“எவ்ளோ பட்ஜெட்?” ஜேகேடி.

“பத்துகோடியாம்” ஜோ

“ஏதாம், யாராம் ப்ரொடியூசர்?” கேட்டார் ஜேகேடி.

“அது தெரியலை, ஆனா நாம வெற்றிக்கு சம்பளமா பத்துகோடிதான் கொடுத்தோம்” என்றான் ஜோ.




GALAXY BOOKS
@galaxybs
SUBSCRIBE

# சுவரின்றி சித்திரமா?

மீரா அகமது, லண்டன்

'சந்தோஷத்துல பெரிய சந்தோஷமே அடுத்தவங்கள சந்தோசப்படுத்துறது தான்' இதை நாம் அடிக்கடி கேள்விப்பட்டிருப்போம். இதற்கு உண்மையான அர்த்தம் என்ன? மற்றவர்கள் கஷ்டத்தில் இருக்கும் போது அல்லது அவர்களுக்கு ஒரு தேவை இருக்கும் போது உதவி செய்வது என்பது தான். அல்லது நாமாகவே ஆசைப்பட்டு அவர்களுக்கு உதவுவது, பரிசளிப்பது என்பதுவும் இதில் அடங்கும். அப்போது நாம் உதவி செய்பவர்கள் சந்தோஷப்படும் போது நம் மனதும் மகிழ்ச்சி அடையும். ஒரு நல்ல மனநிலை உருவாகும். இதை அன்பு, கருணை, உதவி என்று வைத்துக் கொள்ளலாம்.

விண்மீன்

இதைத்தவிர இன்னொன்றும் உண்டு. அடுத்தவர்கள் ஆசைப்படுவதை எல்லாம் நிறைவேற்றுவது, அதன் மூலம் அவர்களை மகிழ்விப்பது. அடுத்தவர் தேவைக்காக அல்ல, தனிப்பட்ட விருப்பத்திற்காக. அதனால் உங்களுக்கு மனதளவில் அதிருப்தி ஏற்பட்ட போதிலும் அதை தியாகம் என்று சமாதானப்படுத்திக் கொள்வது.

அடுத்தவர்களுக்கு பிடிக்கும் என்பதற்காக செய்யும் ஒரு காரியம் உங்கள் மனதுக்கும் மகிழ்ச்சிச்சியை தரவேண்டும். அதனால் உங்களுக்கு சில inconvenience மற்றும் சங்கடங்கள் வந்தாலும் மனதளவில் நீங்கள் ஒரு திருப்தியை உணர வேண்டும். இது தான் win win situation. இரு புறமும் வெற்றி.

சரி அப்படியானால் இரண்டிற்கும் என்ன வேறுபாடு? இதில் ஒரு குழப்பமும் தேவை இல்லை. எந்த ஒரு காரியத்தையும் அடுத்தவர்களுக்காக செய்யும் போது உங்கள் மனதிற்கு எதாவது ஒரு நெருடல் இருக்கிறதா என்று பாருங்கள். அப்படி நீங்கள் discomfort ஆக உணர்ந்தால் அது கண்டிப்பாக தேவை இல்லாத ஆணியே தான்! உங்களை விட யாரும் இந்த உலகில் முக்கியம் இல்லை. குடும்பம், உறவுகள், நண்பர்கள் கண்டிப்பாக முக்கியம் தான் ஆனால் அதுக்கும் முன்னர் 'நீங்கள்' உங்களுக்கு



முக்கியம். இன்னும் சுத்தி வளைத்து சொல்வதானால் அடுத்தவங்களுக்கு உதவவாவது நீங்கள் நன்றாக ஆரோக்கியமான உடல் மற்றும் மனதோடு இருக்க வேண்டுமல்லவா? சுவர் இருந்தால் தானே சித்திரம்!

அதற்காக யாருக்கும் எதுவும் செய்யக்கூடாது என்பதில்லை. சிலர் தனக்கு அதீத முக்கியத்துவம் கொடுத்து, கூட இருப்பவர்களின் நலனை இரண்டாம் பட்சமாக கருதுவார்கள். தனக்குப் போகத்தான் எதுவும் என்று சுயநலமாக நடப்பர். அது அளவுக்கு அதிகமாக தன்னை, தன் சுயத்தை முன்னிலை படுத்துவது. அது திருத்தப்பட வேண்டிய விடயம்.

இதுவோ தேவையான, அதிமுக்கியமான விஷயங்களில் கூட தன் நலனை குறைத்து மதிப்பிட்டு மற்றவர்களின் தேவைக்கு, மன நிலைக்கு, மன நிம்மதிக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது. அதன் மூலம் தன் நிம்மதியை இழப்பது. இரண்டையும் குழப்பிக் கொள்ள வேண்டாம்.

ஒரு சிறு கதை நினைவுக்கு வருகிறது. ஒரு ஆசிரியர் ஆளுக்கொரு பலூன் குடுத்து ஊதச்சொல்லி ஒவ்வொருவரின் பெயரையும் எழுதச் சொல்கிறார். பின்பு அத்தனை பலூன்களையும் அறையில் போட்டுவிட்டு இப்போது அவரவர் பெயர் எழுதப்பட்டதை எடுக்கச் சொல்கிறார். எல்லோரும் தேட ஆரம்பித்தனர். கடைசி வரை ஒருவருக்கும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆசிரியர் அனைவரையும் நிறுத்தச் சொல்லிவிட்டு, இப்போது ஒரு பலூனை எடுத்துப் பார்த்து அதில் யார் பெயர் இருக்கிறதோ அவரிடம் குடுக்கச் சொல்கிறார். சிறிது நேரத்திலேயே அனைவரிடமும் அவரவர் பெயர் எழுதப்பட்ட பலூன்கள் கிடைத்து விடுகிறது.

ஆசிரியர் 'அந்த பலூன்கள் தான் மகிழ்ச்சி. நம்முடைய சந்தோசத்தை மட்டுமே தேடிக்கொண்டிருந்தால் ஒரு போதும் கிடைக்காது. பிறர் மீது அக்கறை கொண்டால் சந்தோசம் நம்மை வந்தடையும்' என்றார்.

இந்தக்கதையில் எந்தவித குழப்பமும் இல்லை. அதனால் எல்லாம் சுபம். இதே கதையில் ஒரு மாணவன் இன்னொரு மாணவனிடம் எனக்கு உன்னுடைய இந்த நீல நிற பலூன் தான் வேண்டும் என்று வற்புறுத்துவதாக வைத்துக் கொள்வோம். அல்லது அந்த பெரிய பலூன் தான் வேண்டும் என்று கேட்டால் என்ன செய்வது? அதை வைத்திருக்கும் மாணவனுக்கும் அந்த நீல நிற பலூன் பிடித்திருந்தால்?! கேட்ட மாணவன் நெருங்கிய தோழனாக இருந்தால் இவனே ஆசையாக கொடுத்து விடலாம். அப்படியானால் எதிர்மறைக்கு இடமில்லை. அப்படி இல்லாமல் இவனுக்கு கொடுக்கவும் மனதில்லை எனில் என்ன செய்வது? கொடுக்கத் தேவை இல்லை.

அப்படிக் எதாவது அழுத்தத்தில் கொடுத்தால், அது கண்டிப்பாக கருணை, விட்டுக்கொடுத்தல், அன்பு என்ற எந்தத் தலைப்பின் கீழும் வராது. சுயத்தைக் கைவிடுதல் என்றுதான் பொருள். அதாவது புரியும்படி சொல்வதானால், உங்களை நீங்களே நடுத் தெருவில் அம்போவென்று விட்டுவிடீர்கள்.
ஏழை வீட்டு அடுப்பெரிய விறகாவது மனிதம், புனிதம். அடுத்தவன் பிக்கினிக் பார்பிக்யூவிற்கு விறகாவதை என்னவென்று சொல்வது?

நீங்களும் மகிழ்ந்து மற்றவர்களையும் மகிழ்வியுங்கள்! அடுத்தவர்களை மகிழ்விக்க உங்கள் மன நலனை நிராகரிப்பது, உங்களுக்கு நீங்களே செய்யும் துரோகமே தவிர வேறென்ன? தொடர்ந்து இதே போல் ஈடுபடும் போது காலப்போக்கில் அதுவே அடுத்தவர் மீது மனக்கசப்பாக மாறி விடும். அதாவது யாருக்காக பார்த்து பார்த்து ஒவ்வொன்றாக செய்தீர்களோ அவர்கள் மீதே கடைசியில் வெறுப்பு தோன்றும். இது தேவையா? என்று யோசிக்க வேண்டும். எப்படி திடீரென்று யாராவது உதவி கேட்கும்போது செய்யாமல் இருப்பது? எனக்கு வேறு வேலை இருக்கிறது என்று எப்படி சொல்வது? (அட, வேறு வேலையே இல்லாவிட்டாலும் தான் என்ன? இதை செய்வதில் அவ்வளவு நாட்டமில்லை என்று சொல்லத் தயக்கமே தேவையில்லை!) அப்படிச் சொன்னால் ஏதும் நம்மை தவறாக எடுத்துக் கொள்வார்களோ? மனதில். இப்படிப் பல கேள்விகள் ஓடிக்கொண்டிருக்கும். அது, அது பாட்டுக்கு ஓடிக்கொண்டிருக்கட்டும்.

அப்படியானால் முதலில் செய்ய வேண்டியது என்ன? முதலில் சின்னச் சின்ன அடியாக எடுத்து வைக்கலாம். ரொம்ப நாட்களாக எதாவது ஒரு விஷயம் ஆசைப்பட்டிருப்போம் ஆனால் அதை செய்யாமலேயே காலம் கடத்திக் கொண்டிருப்போம். அதை ஒவ்வொன்றாக செய்ய ஆரம்பிக்கலாம். அது ஒன்றும் நாம் நினைக்கும் அளவிற்கு கடினமானதாக இருக்காது. எளிதான ஒன்று தான்.


பல நாட்களாக, இல்லை, மாதங்களாக பார்க்க வருகிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்த பழைய நண்பனை/ தோழியை பார்க்க போவது, ஆசையாய் வாங்கி வைத்திருக்கும் ஆடையை, யாரு வீட்டிலாவது விஷேசம் வருமா என்று எதிர்பார்த்தே உடுத்தாமல் வைத்திருப்பீர்களே, அந்த ஆடையை அணியுங்கள்.. இதோ இன்றே உங்கள் வீட்டிலேயே விஷேசம் போல் உணர்வீர்கள். வெயிலில் பைக்கில் போய்க் கொண்டிருக்கிறீர்கள்... ஒரு கரும்புச்சாறு கடையைத் தாண்டும் போது மனது நிற்க சொல்லும்... ஆனால் நாம் அதை கண்டுகொள்ளாமல் எதற்கு தேவையில்லாமல் இன்னும் கொஞ்ச நேரத்தில் சேரும் இடம் வந்து விடுமென்று மனதை அடக்கி விடுவோம். சிறுவராய் இருந்த போது அடக்கப்பட்டது போலவே. அதற்கு மாறாக பைக்கை ஓரமாக நிறுத்திவிட்டு ஒரு கிளாஸ் கரும்புச்சாறு வாங்கி ஒரு மிடறு குடித்துப்பாருங்களேன்..! ஒரு மிடர் தொண்டையில் இறங்கும் போது உணரும் ஒரு குளிர்ச்சி... வேறொன்றும் இல்லை. இவ்வளவு எளிதானது தான், நம்மை நாமே அக்கறையாய் பார்த்துக் கொள்வதென்பது!

பார்த்துக் கொள்வோமா?

சுவருக்கு முதலில் வெள்ளை அடிப்போம் ; சித்திரம் காத்திருக்கும்.

# காதலுக்கு பிரபஞ்சம் ஒரு கைப்பிடி

**நௌஷாத் கான் .லி, அபுதாபி**




காதலுக்கு பிரபஞ்சம் ஒரு கைப்பிடி – இது ஒரு கவிதை நூல் .

கவிஞர் மெஹராஜ் அவர்களின் கவிதை பார்ப்பதற்கும் ,படிப்பதற்கும் எளிமையாக இருந்தாலும் அந்த கவிதைகளில் எல்லாம் ஒருவித ஈர்ப்பும், யதார்த்தமும் நிறைந்து இருக்கும்.

இந்த புத்தகம் முழுவதும் நிறைய கவிதைகள் மனதுக்கு பிடித்து இருந்த போதும் அவற்றையெல்லாம் ஒட்டு மொத்தமாக விமர்சனங்களில் சொல்லி விட்டால் புத்தகம் படிக்க விரும்பும் அன்பர்களுக்கு அவை இடையூறாக கூட இருக்கக்கூடும் எனவே என் மனம் கவர்ந்த ஒரு சில கவிதைகளை வாசகர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

ஒரு கட்டப்பை போல
எல்லா துயரங்களையும்
தனக்குள் நிரப்பி கொள்கிறது
தூக்கம்

துயரங்களுக்கு ஒரு தற்காலிகமான தீர்வு தூக்கத்தை விட என்ன இருந்து விட போகிறது.

கர்வம் எல்லாம்
ஒன்றும் இல்லை உன்னோடு
பேசாமல் இருப்பதற்கு
நீயாக வந்து பேசினால்
காலர் தூக்கி விட்டுக்கொள்ளும்
என் காதல் அவ்வளவு தான்

இன்றைய காதலின் யதார்த்தத்தை இதை விட வேறு எப்படி தான் சொல்ல முடியும் !

கைகளை அசைத்தபடி
நீண்ட நேரம் கால் கடுக்க
நின்று கொண்டே
சாப்பிட அழைக்கும்
அந்த நெடுஞ்சாலை
உணவகத்து ஊழியரை
நான் என் கவிதையில்
இடம் கொடுத்து
அமரவைத்து
அழகு பார்த்தேன்.

மனிதம் நிறைந்த ,அன்பு நிறைந்த இது போன்ற கவிதைகளை இவரது படைப்புகளில் ஆங்காங்கே காணலாம்.

என்னைப்போலவே
நீயும் என் மீது
அன்பு செய்திருந்தால்
அன்பின்
யாசகியாக இல்லாமல்
நான் எப்பொழுதோ
தேவதையாகி இருப்பேன்

அன்பு மட்டுமே எல்லாவற்றையும் அழகாய் மாற்றும் என்பதை இதை விட எப்படி அழகாய் சொல்லி விட முடியும்

வந்தமரும் தருணம் எல்லாம்
பறத்தலின் இன்பத்தை
பறவையிடம் கேட்டறிந்து
உதிரும் இலைகளிடம்
வா பயணிக்கலாம் ...
என்பதை தவிர்த்து
வேறு என்ன கேட்கும் காற்று

இயற்கையில் நிகழும் சில சம்பவங்களை இப்படியும் கற்பனை செய்து அழகாய் சொல்லி விட முடியுமா என வியக்க வைக்கிறார் கவிஞர் மெஹறாஜ்.

ஒரு அழகான மாலை வேளை, கொஞ்சம் மழையின் தூறல் ,கையில் ஒரு கோப்பை தேநீர் ,இளையராஜா இசை அதோடு கவிஞர் மெஹறாஜ் அவர்களின் கவிதை புத்தகத்தோடு ஒரு வாசிப்பு அமைந்தால் பெரும் சுகம் தான்.

நிச்சயம் இளைஞர்களுக்கு பிடித்தமான நூலாக இந்நூல் விளங்கும்!

---

**காதலுக்கு பிரபஞ்சம் ஒரு கைப்பிடி**
**கவிஞர் மெஹறாஜ் இஸ்மாயில்**
**ஆதிரா பதிப்பகம்**
**விலை ரூ. 180/-**

---

# வேர்களின் சாவி

கங்கா (காங்கேயன் பசுபதி), கலிபோர்னியா



1

நியூயார்க் — 2002, மார்ச்

மூன்று வயதில் தாத்தா இறந்தார். நினைவில் இருப்பது ஒன்றே ஒன்று — அவர் கை. பெரிய, கரடுமுரடான கை. என் சிறிய விரல்களைப் பற்றிய அந்தக் கை, இருபத்தாறு வருடம் கழித்து மீண்டும் என்னைத் தொட்டது.

வாய்ஸ்மெயிலில்.

"காவ்யா, புதுச்சேரியிலிருந்து வக்கீல் விஸ்வநாதன். உங்கள் தாத்தாவின் வீடு இடிக்கப்படுகிறது. ஒரு சாவி உங்களிடம் இருக்கிறது. நீங்கள் வர வேண்டும்."

சாவி...?

நியூஜெர்சியில் இருக்கும் அப்பாவுக்குப் போன் செய்தேன்.

"அப்பா, புதுச்சேரியிலிருந்து—"

"போகாதே." குரல் கத்தியின் கூர்மை.

"ஏன்?"

"உன் தாத்தா ஒரு துரோகி காவ்யா. அந்த வீட்டை இடிச்சா நல்லது."

சொடுக்.

என் கை நடுங்கியது. அப்பா தாத்தா பற்றிப் பேசுவதே இல்லை. இப்போது திடீரென்று — துரோகி?

அன்றிரவு தூக்கம் வரவில்லை.

2

நியூ ஜெர்சி

மறுநாள் அப்பா வீட்டுக்குப் போனேன்.

அவர் இல்லை. அம்மா சொன்னாள்: "ஆபீஸ் போயிருக்கார்."

நான் நேராக அவர் அறைக்குப் போனேன். பழைய அலமாரி. அதன் மூலையில் ஒரு மரப்பெட்டி. பிரெஞ்சில் எழுதியிருந்தது: "Ne jamais ouvrir."

ஒருபோதும் திறக்காதே.

திறந்தேன்.

உள்ளே — நான்கு இதழ் வடிவ வெண்கலச் சாவி. அதன் பிடியில் ஆறு எழுத்துக்கள்: LVEDLR.

கூடவே ஒரு மஞ்சள் காகிதம். தாத்தாவின் கையெழுத்து:

"இந்தச் சாவி ஒரு கதவைத் திறக்கும். ஆனால் அந்தக் கதவைத் திறந்தால், குடும்பத்தின் உண்மை வெளிவரும். தற்போது சில உண்மைகள் புதைந்திருப்பதே நல்லது."

அப்போது கதவு திறந்தது. அப்பா.

பெட்டியைப் பார்த்தார். முகம் வெளிறியது.

"நீ... இதைத் திறந்தியா?"

"அப்பா, என்ன இது?"

அவர் சுவரில் சாய்ந்தார். கண்களை மூடினார்.

"உன் தாத்தா துரோகி மட்டுமில்ல காவ்யா..."

நிறுத்தினார்.

"என்ன அப்பா?"

"அவர் அதைவிடப் பயங்கரமான ஒன்றைச் செய்தார்."

அவர் அறைக்குள் போய் கதவை சாத்திக்கொண்டார்.

## 3

புதுச்சேரி — ரூ டூப்ளே

இரண்டு நாள் கழித்து. சென்னை விமான நிலையம். டாக்சியில் புதுச்சேரி.

ECR சாலை. வலதுபுறம் கடல். இடதுபுறம் சுண்ணாம்பு சுவர்கள். காற்றில் உப்பு வாசனை.

புதுச்சேரி எல்லை.

திடீரென்று எல்லாம் மாறியது. சாலை குறுகியது. வீடுகள் மஞ்சள் நிறம். பால்கனிகளில் பூச்செடிகள். தெரு விளக்குகள் பிரெஞ்சு ஸ்டைல்.

இது இந்தியாவா? பிரான்ஸா?

ரூ டூப்ளே தெரு. வக்கீல் விஸ்வநாதன் அலுவலகம்.

வெள்ளை வேஷ்டி. வெள்ளைச் சட்டை. எழுபது வயது.

"வாங்க காவ்யா. உங்க தாத்தா பத்தி நிறைய கேள்விப்பட்டிருப்பீங்க."

"ஒன்னும் தெரியாது சார். அப்பா பேசவே மாட்டார்."

அவர் பெருமூச்சு விட்டார்.

"1954. புதுச்சேரி இந்தியாவுடன் இணைந்த வருடம். அந்த இரவு என்ன நடந்ததோ... உங்க தாத்தா மேல பழி விழுந்தது."

"என்ன பழி?"

"ஆளுநர் லூசியனைக் கொன்னதா சொன்னாங்க."

என் மூச்சு நின்றது.

அப்போது வெளியே ஒரு கார் நின்றது. இறங்கியவர் — வெள்ளைக்காரப் பெண். அறுபது வயது. நீலக் கண்கள்.

நேராக என்னிடம் வந்தாள்.

"நீங்கள் மகாதேவனின் பேத்தியா?"

"ஆமா..."

"நான் மேரி. பியர் லூசியனின் மகள். புதுச்சேரியின் கடைசி பிரெஞ்சு ஆளுநரின் மகள்."

அவள் கண்களில் நெருப்பு. விஸ்வநாதன் அங்கிள் நீங்கள் இங்கு வருவதாகக் கூறினார்.

"என் தந்தை இறக்கும்போது உங்கள் தாத்தாவுடன் தான் கடைசி நிமிடங்களை கழித்ததாகக் கூறுகிறார்கள். அவர் சாவில் எனக்கு பல கேள்விகளுக்கு பதில் தெரியவில்லை"

4

ஸ்ரீ அரபிந்தோ ஆசிரமம்

மறுநாள் காலை.

ஆசிரமத்தின் வாசல். வெள்ளைச் சுவர்கள். நடுவில் சமாதி — பூக்கள் குவிந்திருந்தன. மௌனம் காற்றில் கலந்திருந்தது.

மேரி என்னுடன் வந்திருந்தாள்.

ஆர்க்கைவ்ஸ் அறை. பழைய கோப்புகள். தூசி படிந்த வரலாறு.

ஒரு புகைப்படம் கிடைத்தது. தாத்தா அன்னையுடன் நிற்கிறார். பின்னால் ஒரு பிரெஞ்சு அதிகாரி.

"என் தந்தை," மேரி கண்ணீருடன் சொன்னாள்.

கோப்பில் ஒரு குறிப்பு: "M — trusted by both sides. Double agent suspected."

இருபக்கமும் நம்பப்பட்டவர்? டபுள் ஏஜென்ட்?

"தேடுறது கிடைச்சுதா?"

திரும்பினேன்.

எழுபது வயதுக் கிழவர். வெள்ளை முடி. ஆழ்ந்த கண்கள்.

"நான் ரவி. உங்க தாத்தாவோட மாணவன்."

அவர் கண்களில் பழைய வலி.

"1954 நவம்பர் 1 இரவு. அந்த நாளை என்னால் மறக்க முடியாது. ஆனால் இங்கே சொல்ல முடியாது. நாளை ஆரோவில் வாங்க."

5

ஆரோவில் — மாத்ரு மந்திர்

மாலை நேரம்.

சிவப்பு மண் பாதை. முந்திரி மரங்கள். பச்சைப் புல்வெளி.
மாத்ரு மந்திரின் தங்க நிறக் கோளம் சூரியனில் ஜொலித்தது. பன்னிரண்டு இதழ்கள் போன்ற கட்டிடங்கள் அதைச் சுற்றி.

ஆல மரத்தின் நிழலில் ரவி காத்திருந்தார்.

"1954 நவம்பர் 1..." அவர் ஆரம்பித்தார். "புதுச்சேரி இந்தியாவுக்குப் போகும் இரவு. துறைமுகத்தில் ஒரு கப்பல். பிரெஞ்சுக்காரர்கள் பெட்டிகளை ஏற்றிக்கொண்டிருந்தார்கள்."

"என்ன பெட்டிகள்?"

"சோழர் கால ஓலைச்சுவடிகள். தாமிரப் பட்டயங்கள். ஆயிரம் வருஷ வரலாறு. கடத்த முயன்றார்கள்."

"தாத்தா?"

"தடுத்தார். ஆளுநர் லூசியன் உதவினார். ஆனால்..."

"ஆனால்?"

விண்மீன் மின்னிதழ்

"இன்ஸ்பெக்டர் ராஜன். பிரெஞ்சுக்காரர்களிடம் லஞ்சம் வாங்கியவன். அவன் உங்க அப்பாவைக் கடத்திட்டான்."

என் இதயம் நின்றது.

"என் அப்பாவை?"

"ஆறு வயசு பசுபதி. ராஜன் துப்பாக்கி காட்டி மிரட்டினான். 'சுவடிகளை கொடு, இல்லன்னா இந்தப் பையனை...' ஆளுநர் இடையில் வந்தார். தள்ளப்பட்டு விழுந்தார். Heart attack."

மேரி அழுதாள்.

"ராஜன் பழியை உங்க தாத்தா மேல போட்டான். 'வாயைத் திறந்தா பையனை விட மாட்டேன்' என்று மிரட்டினான். உங்க தாத்தா வாய் மூடிக்கிட்டார். துரோகின்னு பழியை ஏத்துக்கிட்டார்."

"மகனுக்காக..?" காவ்யா

"ஆமா... மகனுக்காக." ரவி

6

மணக்குள விநாயகர் கோயில்

அன்று மாலை.

கோயிலின் யானை என் தலையைத் தொட்டு ஆசிர்வதித்தது. உள்ளே விநாயகர் சிலை. அமைதியான முகம்.

ரவி சொன்னார்: "உங்க அப்பா 1970-ல் அமெரிக்காவுக்கு ஏன் போனார்ன்னு தெரியுமா?"

"தெரியாது."

"கல்லூரியில் பலர் சுற்றி வந்து கத்தினார்கள் — 'துரோகியின் மகன்!, கொலைகாரனின் மகன்' அன்று இரவு வீட்டை விட்டு ஓடினார். மகாதேவன் தேடி கண்டுபிடிச்சார். ஆனால் பசுபதி என்ன சொன்னார் தெரியுமா...?"

"என்ன?"

“நீங்க என் அப்பா இல்ல.”

என் நெஞ்சு வலித்தது.

"இரண்டு மாசத்தில் அமெரிக்கா போயிட்டார். திரும்பி வரலை. மகாதேவன் ஆறு வருஷம் தனியா இருந்தார். 1976-ல் மேலே போயிட்டார்."

"ராஜன்?"

"1998-ல் செத்தான். உங்க தாத்தாவால அவன் உயிரோட இருந்த வரைக்கும் வாய் திறக்க முடியலை."

அப்போது வெளியே சத்தம். ஒரு கார். இறங்கியவன் — கரும்புலி போன்ற உடல். அரசியல்வாதியின் புன்னகை.

"Bienvenue! அமெரிக்காக்காரப் பொண்ணே!"

"நீங்க யாரு?"

"பாண்டியன். MLA. இன்ஸ்பெக்டர் ராஜனோட பேரன்."

என் ரத்தம் உறைந்தது.

7

48 மணி நேரம்

பாண்டியன் சிரித்தான்.

“உங்க தாத்தாவின் வீட்டை இடிப்பதற்கு எனக்கு அதிகாரம் இருக்கிறது”

"உங்க தாத்தா ஏதோ பொக்கிஷம் புதைச்சு வச்சிருக்காரு. அது எனக்குச் சொந்தம்."

"உங்களுக்கு எப்படி?"

"என் தாத்தாவுக்கு உங்க தாத்தா கொடுக்க வேண்டியது."

நான் நேராகப் பார்த்தேன்.

"48 மணி நேரம் கொடுங்க."

"என்ன?"

"48 மணி நேரம். அதுக்குள்ள உண்மை கண்டுபிடிக்கிறேன். இல்லன்னா வீட்டை இடிங்க."

பாண்டியன் சிந்தித்தான்.

"சரி. 48 மணி நேரம். அதுக்குப் பிறகு இந்த வீட்டை தரைமட்டமாக்குவேன்."

அவன் போனான்.

கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். 47:59:58.

கவுண்ட்டவுன் தொடங்கியது.

8

விண்மீன் மின்னிதழ்

ரொமன் ரோலாண்ட் நூலகம்

இரவு 11 மணி.

36 மணி நேரம் மட்டுமே.

நூலகம். பழைய புத்தகங்களின் வாசனை. மஞ்சள் விளக்கு வெளிச்சம்.

சாவியைப் பார்த்தேன். LVEDLR.

"இது என்ன code?" மேரி கேட்டாள்.

லத்தீன் அகராதி புரட்டினேன். பிரெஞ்சு புத்தகங்கள். எதுவும் பொருந்தவில்லை.

ரவி யோசித்தார்.

"உங்க தாத்தா ஒரு வாக்கியம் அடிக்கடி சொல்வார். 'La vérité est dans les racines.'"

"அர்த்தம்?"

"உண்மை வேர்களில் உள்ளது."

திடீரென்று புரிந்தது.

"L-V-E-D-L-R! La Vérité Est Dans Les Racines! ஒவ்வொரு சொல்லின் முதல் எழுத்து!"

மேரி கண்கள் விரிந்தன.

"வேர்கள்... அடித்தளம்!"

9

ரகசிய அறை

தாத்தாவின் வீடு. ரூ சஃப்ரன் தெரு.

அடித்தளத்தில் இறங்கினோம். ஒரு மூலையில் சுவர் வித்தியாசமாக இருந்தது.

ஆறு கல் பொத்தான்கள். L, V, E, D, L, R.

சுவரில் ஒரு சிறிய படம் — மரம், அதன் வேர்கள் கீழே.

"வேர்களிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்!" ரவி சொன்னார். "கீழிருந்து மேலே — R-L-D-E-V-L!"

அழுத்தினேன்.

சுவர் நகர்ந்தது.

உள்ளே சிறிய அறை. நடுவில் இரும்புப் பெட்டி. வெண்கலச் சாவிக்கான பூட்டு.
சாவியைச் செருகினேன்.

திறந்தது.

தங்கம் இல்லை. வைரம் இல்லை.

ஆனால் — ஓலைச்சுவடிகள். தாமிரப் பட்டயங்கள். சோழர் கால கல்வெட்டுப் பிரதிகள்.

ஒரு ஒலிப்பதிவு நாடா.

ஒரு கடிதம்.

ஒரு புகைப்படம் — ஆறு வயசு பசுபதி, கண்களில் பயம், ராஜன் பக்கத்தில் துப்பாக்கியுடன்.

10

தாத்தாவின் குரல்

நாடாவை ஓடவிட்டோம்.

ராஜனின் குரல்: "சுவடிகளை கொடு, இல்லன்னா இந்தப் பையனை..."

தாத்தாவின் குரல்: "பசுபதி! பயப்படாதே கண்ணா!"




விண்மீன் மின்னிதழ்

ஒரு சத்தம். ஆளுநரின் கத்தல். விழும் சத்தம்.

ராஜன்: "இது உன் தப்பு மகாதேவன். நீ என்னைத் தடுத்திருக்கக் கூடாது. இப்போ உன் மேல பழி போடப்போறேன். வாயைத் திறந்தா பையன் போயிடுவான்."

பதிவு முடிந்தது.

கடிதத்தைப் படித்தேன்:

"என் அன்பு பேத்தி காவ்யா,

இதை எழுதும்போது உனக்கு மூன்று வயது. நீ படிக்கும்போது நான் இருக்க மாட்டேன் என்று தெரியும்.

ராஜன் இன்னும் உயிருடன் இருக்கிறான். அவன் இருக்கும் வரை என்னால் வாய் திறக்க முடியாது. உன் அப்பாவை அவன் விட மாட்டான்.

உன் தந்தை என்னை வெறுக்கிறான். அமெரிக்கா போய்விட்டான். அவனிடம் உண்மை சொல்ல முடியவில்லை — சொன்னால் அவன் ராஜனைத் தேடிப் போவான். அவன் உயிருக்கு ஆபத்து.

நான் துரோகி இல்லை. ஆனால் என் மகனைக் காப்பாற்ற அந்தப் பழியை ஏற்றுக்கொண்டேன். ஒரு தந்தையின் கடமை என்ன? தேசமா? மகனா? நான் மகனைத் தேர்ந்தெடுத்தேன்.

பசுபதியிடம் சொல் — நான் அவனை நேசித்தேன். என் உயிரை விட அதிகமாக.

உன் தாத்தா, மகாதேவன்"

என் கண்களில் நீர் வழிந்தது.

## 11

**வி**டியலின் நீதி

48 மணி நேரம் முடிந்தது.

பாண்டியன் வந்தான். இடிப்புக் குழுவுடன்.

ஆனால் நான் தயாராக இருந்தேன்.

என்னுடன் — மாவட்ட ஆட்சியர். அருங்காட்சியக இயக்குநர். பத்திரிகையாளர்கள். பிரெஞ்சு தூதரக அதிகாரி.

விண்மீன்

"இந்தப் பெட்டியில் தங்கம் இல்லை," நான் அமைதியாகச் சொன்னேன். "ஆனால் நம் தேசத்தின் வரலாறு இருக்கிறது."

ஒலிப்பதிவை ஓடவிட்டேன்.

ராஜனின் குரல் ஒலித்தது. மிரட்டல். கொலை.

பாண்டியனின் முகம் வெளிறியது.

"இது... இது..."

"உன் தாத்தா ஒரு கொலைகாரன் பாண்டியன். திருடன். என் தாத்தா இல்லை."

கேமராக்கள் சுழன்றன.

பாண்டியன் ஓடினான்.

போலீஸ் துரத்தியது.

## 12

**அ**ருங்காட்சியகம்

அடுத்த நாள்.

பாண்டிச்சேரி அருங்காட்சியகம். வெள்ளை நிற பிரெஞ்சுக் கட்டடம். முன்பக்கம் காந்தி சிலை.



இயக்குநர் டாக்டர் ராமச்சந்திரன் ஓலைச்சுவடிகளைப் பார்த்தார். அவர் கைகள் நடுங்கின.

"சோழர் காலம்... ராஜராஜன் காலத்து கல்வெட்டுப் பிரதி... ஆயிரம் வருஷம் பழமை..."

"இதோட மதிப்பு?" மேரி கேட்டாள்.

"மதிப்பா?" அவர் சிரித்தார். "பணத்தில் அளக்க முடியாது. இது தமிழ்நாட்டின் ஆன்மா."

பத்திரிகையாளர்கள். கேமராக்கள். ஒளிவெள்ளம்.

"இந்த வரலாற்றுச் சின்னங்களை அருங்காட்சியகத்துக்கு வழங்குவதில் பெருமைப்படுகிறேன்."

சுவரில் தாத்தாவின் புகைப்படம் மாட்டப்பட்டது.

கீழே:

"மகாதேவன் முதலியார்(1924-1976) தமிழ்ப் பாரம்பரியத்தின் காவலர்"

அப்பாவுக்குப் போன் செய்தேன்.

"அப்பா, தாத்தா பேரு அருங்காட்சியகத்தில் இருக்கு."

மறுமுனையில் மௌனம்.

பிறகு அவர் குரல். உடைந்த குரல்.

"போட்டோ... போட்டோ எடுத்து அனுப்பு காவ்யா."

13

வேர்களும் கிளைகளும்

விமான நிலையம். சென்னை.

அப்பா வந்திருந்தார்.

முப்பத்திரண்டு வருடங்களுக்குப் பிறகு இந்திய மண்ணில் கால் வைத்தார்.

அவர் கண்களில் நீர்.

"காவ்யா..."

"தெரியும் அப்பா. எல்லாம் தெரியும்."

"என்னால் மன்னிக்க முடியலை. அவரை. என் வாழ்நாள் முழுக்க வெறுத்தேன்."

"அவர் உங்களுக்காக எல்லாத்தையும் இழந்தார் அப்பா. பேரை இழந்தார். மகனை இழந்தார். தனியா செத்தார்."
அவர் அழுதார். என் அப்பா அழுவதை முதல்முறையாகப் பார்த்தேன்.

மேரி என் பக்கத்தில் வந்தாள்.

"என் தந்தையைக் கொன்றது யார்னு இப்போ தெரியும். நன்றி காவ்யா."

ரவி என் தோளைத் தொட்டார்.

"உங்க தாத்தா இப்போ நிம்மதியா இருப்பார்."

விமானம் புறப்பட்டது.

ஜன்னல் வழியே பார்த்தேன். மஞ்சள் வீடுகள். நீலக் கடல். சிவப்பு மண்.
என் வேர்கள்.

சாவியை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டேன்.

14

**மு**டிவுரை

2026 — இருபத்தி நான்கு வருடங்கள் கழித்து சென்னை புத்தகக் கண்காட்சி.

மேடையில் பெரிய போஸ்டர்:

"வேர்களின் சாவி" — காவ்யா பசுபதி

கூட்டம் நிரம்பியிருந்தது.

மைக்கின் முன் நின்றேன்.

"இது என் தாத்தாவின் கதை. துரோகி என்று முத்திரை குத்தப்பட்ட தியாகியின் கதை. தன் மகனுக்காக எல்லாவற்றையும் இழந்த தந்தையின் கதை."

முதல் வரிசையில் அப்பா உட்கார்ந்திருந்தார்.

எழுபத்தெட்டு வயது. சக்கர நாற்காலி. ஆனால் கண்களில் — முதல்முறையாக — பெருமை.

புத்தகத்தின் முதல் பக்கத்தில் எழுதியிருந்தேன்:

"என் தாத்தா மகாதேவனுக்கு — மௌனமாக வாழ்ந்து, மௌனமாக மறைந்த வீரனுக்கு."

"என் அப்பா பசுபதிக்கு — இப்போதாவது உண்மை தெரிந்ததற்கு."


அப்பா என்னைப் பார்த்தார். மெல்ல தலையசைத்தார்.

புத்தகத்தின் கடைசி வரி:

"வேர்கள் மண்ணில் இருந்தாலும், கிளைகள் வானத்தைத் தொட வேண்டும். நீங்கள் எங்கே இருந்தாலும், உங்கள் வேர்களை மறக்காதீர்கள்."

# தொலைந்த சாவி

பாலமுருகன்.லோ,
சிட்லபாக்கம், சென்னை



ஓங்கி தலையில் சம்மட்டியால் அடித்தது போல ஒரு வலி. தலையைப் பிடித்தவாறே அந்தக் கடிதத்தை மீண்டும் மீண்டும் பார்த்துக்கொண்டிருந்தான் தருண்.

"நான் என்ன தவறு செய்தேன்? ஏன் அவர் இப்படி எழுதியிருக்கிறார்? ஒருவேளை நான் எழுதத் தகுதியானவன்தானா, இல்லையா?" அவனது மனம் வெந்து வெம்பிக்கொண்டிருந்தது.

தருண் இப்படி இருப்பதற்குக் காரணம், அவனுக்குக் கிடைத்த அந்த விமர்சனக் கடிதமே. தண்ணீரில் விழுந்தவன் தத்தளிப்பதைப் போல, அவனது மனம் குழப்பத்தில் தத்தளித்துக்கொண்டிருந்தது.

"இலக்கிய நடையில் எழுதுவதுதான் சிறந்த கதை என்றால், ஒரு சராசரி மனிதன் படிப்பதற்கு எப்படி எழுதுவது? சாமானியர்கள் இலக்கிய நயமுள்ள கதைகளைத்தான் விரும்புவார்களா?"

கேள்விகள் அவன் மனதில் ஓடிக்கொண்டிருந்தன.

படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தான். தலையணையில் முகத்தைப் புதைத்து குப்புறப் படுத்துப் பார்த்தான். ஆனால் அவனால் தூங்க முடியவில்லை. அவனது தற்போதைய மனநிலை 'பூட்டிய வீடு மற்றும் தொலைந்த சாவி' என்ற விளையாட்டைப் போலவே இருந்தது.

பூட்டிய வீட்டுக்குள் அடைக்கப்பட்டு, பல புதிர்களை எதிர்கொண்டு, சாவியை மீட்டு, கடைசியில் கதவைத் திறந்து வெளியே வர

வேண்டும். தருணும் அப்படியொரு மன விளையாட்டில் மாட்டிக்கொண்டு போராடிக்கொண்டிருந்தான்.

அன்றைய இரவு அப்படியே முடிந்தது.

அடுத்த நாள் அதிகாலையில், அம்மா அவனை எழுப்பும் சத்தம் காதில் விழுந்தது.

“தருண், நேத்து அம்மாகிட்ட சொல்லிட்டுத்தானே படுத்த? இன்னைக்கு ஆபீஸுக்கு சீக்கிரம் போகணும்னு… எழுந்திரு” என்றாள் மீனா.

“ம்மா… தெரியும், எழுந்துட்டேன். இன்னும் அரை மணி நேரத்தில் கிளம்பிடுவேன். நீங்க காலைக்கும் மதியத்துக்கும் சாப்பாடு ரெடி பண்ணிட்டீங்களா?”

“ஸ்ஸ்… ஸ்ஸ்… ஸ்ஸ்…” என்று குக்கரின் சத்தம் வீடெங்கும் ஒலித்தது.

மீனா அடுப்பங்கரையில் மும்முரமாகச் சமைத்துக்கொண்டிருந்தாள். காலைக்கு பூரியும் உருளைக்கிழங்கு மசாலும், மதியத்திற்கு முருங்கைக்காய் சாம்பாரும் பாகற்காய் வறுவலும் அவன் கேரியரில் எடுத்து வைத்திருந்தாள்.

“தருண், எல்லாம் ரெடி பண்ணிட்டேன்டா. நீ இப்போ இந்த வேளைக்குச் சாப்பிட்டு, மதியத்துக்கு பையில் இருக்கிறதச் சாப்பிடு,” என்றாள்.

“சரிம்மா… பூரிக்கு உருளைக்கிழங்கு மசால் சூப்பர். ரெண்டு பூரி இன்னும் எக்ஸ்ட்ராவா வேணும்.”

“ஏன்டா, ரெண்டு போதுமா? இன்னும் ஒண்ணு சேர்த்து வைச்சுக்கோ?”

“இல்லம்மா, ரெண்டு போதும். நிறைய சாப்பிட்டு அப்புறம் ஆபீஸ்ல போய் தூங்கச் சொல்றியா?”

“சரிடா, ஆசையா கேட்டயேன்னு சொன்னேன். வேணாமுன்னா விடு” என்றாள்.

மாநகரப் பேருந்தை அவசரமாகப் பிடித்து, கூட்ட நெரிசலில் இடிபட்டும் மிதிபட்டும், ஸ்டெர்லிங் ரோட்டில் இருக்கும் தனது அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தான் தருண். வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட்டுவிட்டு, ஒரு கப் காபிக்காக பேன்ட்ரிக்குச் சென்றான். அங்கு அவன் நண்பர்களும் கூடியிருந்தனர். அவர்களுக்கு காலை வணக்கம் சொல்லிவிட்டு, தன் இருக்கைக்குச் சென்று அன்றாட வேலையைத் தொடங்கினான்.

மதிய இடைவேளையில், அம்மா கொடுத்த பையை எடுத்துக்கொண்டு அலுவலக கேன்டீனுக்குச் சென்றான். மேசையில் அமர்ந்து, ஒரு கையில் புத்தகத்தைப் பார்த்தபடியே உணவைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அவனுடைய தோழி நிகிதா, அவனுடன் சேர்ந்து சாப்பிட அமர்ந்தாள்.

“என்ன தருண், ரொம்ப மும்முரமா எதையோ படிச்சுட்டு இருக்கே போல! கொஞ்சம் என்னன்னு சொல்லலாமா?” என்றாள்.

தருண் பதில் சொல்லவில்லை. சாப்பிடுவதிலும் படிப்பதிலும் கவனமாக இருந்தான்.

அவளுக்கு எரிச்சல் வந்தது. ‘நாம் கேட்டால் பதில் சொல்லாமல் அப்படி என்ன படிக்கிறான்?’ என்று எண்ணியவள், திடீரென்று அந்தப் புத்தகத்தை அவன் கையிலிருந்து பிடுங்கினாள்.

புத்தகத்தினுள் மடித்து வைத்திருந்த ஒரு வெள்ளைக் காகிதம் கீழே விழுந்தது.

“தருண், மன்னிச்சுக்கோ. நான் உன்னைக் கூப்பிட்டேன். நீ திரும்பியோ நிமிர்ந்தோ பார்த்திருக்கலாம். அதை நீ செய்யாததால் நான் இதைச் செய்ய வேண்டியதா போயிடுச்சு”

அவள் கீழே விழுந்த காகிதத்தை எடுத்தாள்.

“இதில் என்ன இருக்கு? பார்க்கலாமா?”

“எனக்கு வந்த ஒரு கடிதம்”

“யாரிடமிருந்து? வாசகரிடமிருந்தா?”
“இல்லை. அவரும் ஒரு எழுத்தாளரே”

“உன் சம்மதத்துடன் படிக்கவா?”

“சரி, படி” என்றான் தருண்.

இரண்டு நிமிடம் படித்தவுடன், அவளது கண்கள் விரிந்தன.

“என்ன தருண், அவர் ஏதேதோ எழுதியிருக்காரு! அவர் சொல்லற மாதிரி ஒண்ணும் நீ அந்தக் கதையில் சொல்லலையே! பிறகு ஏன் அவர் அப்படி எழுதியிருக்காரு?”

தருண் அமைதியாக இருந்தான்.

“இப்ப என்ன செய்யப்போற?” என்றாள் நிகிதா.

“நீ எனக்கு ஒன்று சொல்ல முடியுமா? இப்பொழுது இருக்கும் இந்த நவீன யுகத்தில் இலக்கிய நடையில் கதைகளைப் புனைவது சரியா? அல்லது அன்றாடப் பழக்கத்தில் உள்ள சொற்றொடர்களை வைத்தே கதை சொன்னால், படிப்பவர்கள் விரும்புவார்களா?”

“தருண், உன் கேள்வியிலேயே பதிலும் அடங்கி இருக்கிறது”

“என்ன சொல்கிறாய், நிகிதா?”

“தருண், எல்லாரும் ஒரே மாதிரி படிக்க மாட்டாங்க. சிலருக்கு இலக்கிய நடை பிடிக்கும். சிலருக்கு நேரா சொல்லும் கதை பிடிக்கும். அதனால ஒருத்தரின் கருத்தை வைத்து உன் எழுத்தையே சந்தேகப்படாதே”

தருண் அவளைப் பார்த்தான்.

“நிகிதா, நான் ஒரு வரையறை வைத்துக்கொண்டுதான் எழுதுகிறேன். மக்கள் இதை எழுதினால் விரும்புவார்கள் என்று நான் எதையும் எழுதுவதில்லை. நாம் முன்வைக்கும் கருத்து நல்ல விதத்தில் உள்ளதா, பலருக்கும் அந்தச் செய்தி போய்ச் சேருமா என்று எண்ணித்தான் எழுதுகிறேன். படிப்பவர் மனம் கோணாதவாறு பார்த்துக்கொள்கிறேன். இருந்தும் அவர் ஏன் அப்படிச் சாடி எழுதினார் என்று தெரியவில்லை”

“தருண், நான் ஒன்று உனக்குச் சொல்ல விரும்புகிறேன்”
“என்ன? சொல்லு”

“உன் எழுத்தை நீ நம்புகிறாயா?”

“பின்னே! என் எழுத்தை நான் நம்பாமல் வேறு யார் நம்புவது?”

“அப்படியென்றால் இதையெல்லாம் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாதே. உன்னுடைய படைப்பு ஒரு இதழில் வெளிவந்திருக்கிறது என்றாலே, அதில் ஏதோ ஒரு நல்ல விஷயம் இருக்கிறது என்றுதானே அர்த்தம். அதை நீ உணர்கிறாயா?”

“நிச்சயமாக, நிகிதா. நான் அதை உணர்கிறேன்”

“சரி தருண், நமக்கு இப்ப நேரம் ஆகுது. பிறகு சந்திப்போம்” என்றாள் நிகிதா.
மதிய உணவை முடித்தவுடன், தருண் தன் அன்றாட வேலைகளை முடித்துவிட்டு மாலை வீடு திரும்பினான்.

அன்று இரவு, ‘நாம் ஏன் அந்த எழுத்தாளருக்கு ஒரு பதில் கடிதம் எழுதக்கூடாது?’ என்று எண்ணியவன், உடனடியாக ஒரு கடிதம் எழுதினான்.

**அன்பு எழுத்தாளர் நண்பருக்கு வணக்கம்,**

உங்கள் கடிதம் கிடைத்தது. நேரத்தை ஒதுக்கி, கதையைப் படித்து, உங்கள் கருத்தைத் தெரிவித்ததற்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கதைகள் இலக்கிய நடையில் எழுதப்பட்டால்தான் சிறந்த சிறுகதையாகும் என்ற கருத்தை நீங்கள் முன்வைத்திருக்கிறீர்கள். ஆனால், சிறுகதை என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும், இந்த நடையில்தான் எழுத வேண்டும் என்று யாரும் வரையறைப்படுத்தவில்லை. சாமானியனும் படிக்கும்படி எழுத வேண்டுமென்றால், முழு இலக்கியத் தரத்தில் மட்டுமே எழுத வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசிப்பவர் மனம் கோணாதவாறு, சொல்ல வேண்டியதைச் சொல்ல முடிந்தால் அதுவே முக்கியம்.

உங்கள் கருத்து உங்களுடையது; அதை நான் மதிக்கிறேன். ஆனால், அதை நான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மக்கள் விரும்புவார்கள் என்பதற்காக எழுதுவதை விட, மக்களுக்கு அது அவசியம் என்பதை உணர்ந்து, அதை அவர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் நான் எழுதுகிறேன். நல்லதைச் சொல்ல வேண்டும்; படிப்பவரின் முகம் சுளிக்காதவாறு சொல்ல வேண்டும். அவ்வளவுதான்.

நன்றி , தருண்

கடிதம் எழுதினானே தவிர, அதை அடுத்த நாள் அஞ்சல் அலுவலகத்தில் சேர்க்காமல் தன் மேசை இழுப்பறையிலேயே வைத்துவிட்டான்.

ஏதோ உத்வேகத்தில் எழுதுவது சரியாகாது என்று தோன்றியது. அன்று இரவு படுக்கைக்குச் சென்றவுடன் நினைவில் ஓடியது அந்தக் கடிதமே.




விண்மீன் மின்னிதழ்

'நாம் பதில் எழுதிவிட்டோம். ஏன் எழுதினோம்? அவரது கருத்தைக் கண்டு வெகுண்டு, உடனே அவருக்கு ஒரு பதில் அனுப்பியாக வேண்டும் என்று எண்ணியதால் எழுதியாகிவிட்டது. ஆனால், ஒருவருக்கு ஒருவர் தர்க்கம் செய்துகொண்டு, போட்டி போட்டுக்கொண்டு கடிதம் எழுதி என்ன சாதிக்கப் போகிறோம்?'

அந்த எண்ணம் தருணை அமைதியாக இருக்க வைத்தது. நிகிதா சொன்னதும் நினைவிற்கு வந்தது.

ஒரு படைப்பு தேர்வாகி பத்திரிகையில் பிரசுரம் ஆகிறது என்றால், அந்தப் படைப்பில் ஏதோ ஒன்று புதைந்திருப்பதால்தான். நல்ல கருத்துக்கு விவாதம் செய்யலாம். ஆனால், முடிவில்லாத ஒன்றுக்கு அர்த்தம் கண்டுபிடிக்க முயல்வது சரியா?

அவர் அவர் வழியில் நடைபோடட்டும். நாம் நம் வழியில் நடப்போம். இவ்வாறு எண்ணியவாறு ஜன்னல் வழியாக வெளியே பார்த்த தருணுக்கு, எதிரே இருந்த கட்டிடத்தின் சுவரில் ஒட்டப்பட்டிருந்த ஒரு விளம்பரப் பலகை அவன் கண்களில் பட்டது. பெரிய எழுத்துகளில் எழுதப்பட்டிருந்தது:

"இது பரந்துபட்ட உலகம்"

அந்த வாசகத்தைப் பார்த்தவுடன் அவனது மனதில் ஒரு எண்ணம் மேலோங்கியது.

'நாம் ஏன் ஒரு குறுகிய வட்டத்திற்குள் மாட்டிக்கொள்ள வேண்டும்? பறவையைப் போல பறந்து செல்வோம்—அந்தப் பரந்துபட்ட உலகில்!'

அந்த இரவு, அவன் மனதிற்குள் பூட்டியிருந்த கதவு மெதுவாகத் திறந்தது. தொலைந்த சாவி கிடைத்திருந்தது.

# அச்சம்..!

ஒரு பெண்ணின்
அமைதியான இரவுகளில்
அவள் இதயத்துக்குள் மட்டுமே
எட்டிப்பார்க்கும் அச்சம்
தனிமை அல்ல...

ஒருநாள்
தன் கனவுகளை எல்லாம்
மடித்துப் பழைய சேலையோடு
சேர்த்து அலமாரிக்குள்
வைத்துவிட நேருமோ என்று...

காதல் இல்லாத ஒரு வீட்டில்
கடமைகளின் சத்தத்துக்குள்
தன் சிரிப்பை மெதுவாக
இழந்துவிட நேருமோ என்று....

குழந்தைகளின் எதிர்காலத்தைப்
பிடித்துக் கொண்டிருக்கும் கைகளில்
தன் எதிர்காலமே
கரைந்து போய்விடுமோ என்று....

அனைவருக்கும் எல்லாமாக இருந்தபின்
தனக்காக மட்டும்
யாருமில்லாத வெறுமை வந்து
அமருமோ என்று...
சமையலறை வாசத்திலும்
அழுகையை மறைத்த சிரிப்புகளிலும்
தன் இளமையைச் சாம்பலாக்கிவிட்டு
ஒருநாள் கண்ணாடி முன் நின்று
இவள் யார்?”
என்று தன்னையே அடையாளம்
காண முற்பட நேருமோ என்று...

பெண்கள் விரும்புவது
வெறும் திருமணம் அல்ல...
மெய்யான உயிர் திளைக்கும் வாழ்வை!

அவர்கள் தேடுவது
வெறும் பாதுகாப்பல்ல...
தங்களை இழக்காத அன்பை!

அவர்கள் வேண்டுவது
ஒரு பொன் கூண்டல்ல...
பறந்து விரிந்த வானை!

இன்றைய பெண்களின்
மிகப் பெரிய அச்சம்....
தனிமை அல்ல!

தன்னையே மெதுவாகப்
புதைத்துக்கொண்டு
மற்றவர்கள் எழுதிய கதையில்
ஒரு பாத்திரமாய்
வாழ்ந்து மறைந்து போவதுதான்!

விண்மீன் மின்னிதழ்

**பவானி சிம்ஹன்,**
**துபை, அமீரகம்**

# மீசைக்காரர் பங்களா

பிரியா ரஞ்சன்,
மதுரை



காலையிலிருந்து அழுதுக்கொண்டிருக்கும் குழந்தையை சமாதானம் செய்ய முடியாமல் தவித்துக்கொண்டிருந்தாள் சரோஜா.

“இன்னாமே கொயிந்த வீச்சு வீச்சுனுக்கீது எதுனா துண்ணுச்சா இல்லியா...?” பக்கத்து வீட்டு கனகா கேக்க, “அத்த ஏமே கேக்குற... ரெண்டு நாளா ஒரே ஜுரம்.... பெரியாசுப்பத்திரிக்கே இட்டுக்கினு போய் பாத்தாச்சு... அந்த கிறுக்குப்பய டாடரு இன்னாத்த படிச்சானோ.... புள்ளைக்கு ஜுரம் அமுங்கவே இல்லை.... பத்து கூட போட்டு பாத்தாச்சு.... இன்னா பண்றதுனே ஒன்னியும் புரிலமே....” வருத்தத்தோடு சொன்னாள் சரோஜா

குழந்தையின் நெற்றியில் கை வைத்துப்பார்த்த கனகா, “ஐயோ இன்னாமே இந்த ஜூடு ஜூடுது... தர்மாசுப்பத்திரிலா சரிவராதுமே அங்க ஒன்னியும் பாக்கமாட்டானுங்க.... நீ

பேசாம முக்கு தெருவாண்டகீர ஆசுப்பதிரி போமே... அந்த டாடரு போன மாசோ எம்புள்ளைய சோக்கா பாத்தாருமே...”

“அதுக்கெல்லாம் என்னான்ட பணம் எங்ககீது கனகா... புள்ளய ஒரு ஆசுபத்திரிக்கி கூட இட்டுக்கினு போ முடியல என்னால...” கண்ணை கசக்கிகொண்டாள் கணவனை இழந்து தனி ஆளாய் எட்டு மாத குழந்தையை வளர்க்கும் சரோஜா.

கண் கலங்கிய சரோஜாவை பார்த்து மனது தாளாமல், “இந்தாமே சரோசா நா ஒன்னு சொன்னா கேப்பியா..?” என்றாள் கனகா.

இன்னாமே... என்ற சரோஜாவிடம் "அந்த பங்களா மீசைக்காரு இருக்காருல" என்று ஆரம்பித்து அவள் காதில் கனகா ஏதோ கிசுகிசுத்தாள்.

“நீ சரினு சொன்னா நா கருப்பையாவ வந்து இட்டுக்கினு போ சொல்றேன்... ஒரு மணி நேரம் தான்... வரும்போது புள்ளிய ஆசுப்பத்திரில காட்டிரலாம் கை மேல காசு வந்துருமே...”

அவள் சொன்னது புரிந்த சரோஜா துக்கம் தாங்காமல் மேலும் அழுக, “யோசிக்காதமே... புள்ள விஷயம்...”

“இல்ல கனகா.... இத்த செய்ய என் மனசு கேக்கல... மாடி வீட்டு ஆயாவாண்ட கேட்டு பாத்துக்கினு வாரேன்... நீ புள்ளய பாத்துக்கோ...”

மாடி வீடு மட்டும் இல்லாமல் சுத்தி பணம் படைச்ச எல்லாரிடமும் கேட்டுவிட்டாள் சரோஜா. ஏற்கனவே குடித்துவிட்டு அனைத்து உறுப்புகளும் பழுதான அவள் கணவனைக் காப்பாற்ற அவள் வாங்கிய கடன்கள் கட்டாமல் இருக்க, மேற்கொண்டு பணம் தர யாரும் முன் வரவில்லை என்பதே உண்மை.

விண்மீன் மின்னிதழ்

கணவன் இறந்த பின் பெரிய வீடுகளில் பாத்திரம் தேய்த்து கடனையும் கட்டி வயித்தையும் கழுவி கொண்டிருந்தாள்.... இதில் குழந்தை வேறு. இந்த மாதிரி திடீர் எதிர்பாராத செலவுகள் தான் அவளுக்கு மிகுந்த கஷ்டத்தை தருவதாய் அமைந்து விடுகின்றன. விரக்தியுடன் வீடு வந்து சேர்ந்தாள்.

“இன்னாச்சுமே...” ஆவலாய் கேட்ட கனகாவை வெறுத்த முகத்துடன் பார்த்தாள் சரோஜா.

“பாவம் கொயிந்த அழுதுகினேகீதுமே” என்ற கனகாவைப் பார்த்து மிகுந்த யோசனையுடன் திணறித்திணறி தலையை தொங்கவிட்ட படி..."கருப்பையாவ வந்து இட்டுக்கினு போவ சொல்லு கனகா" என்றாள் சரோஜா.

“இதுக்கு இன்னாதுக்கு நீ இப்ப மூஞ்ச தொங்கவிட்டுக்கின்னுகீற ஒன்னியும் கவலப்படாத புள்ளிய கொணமாக்கிப்புடலாம்... இரு அவனக் கூட்டியாறே...” என்றபடி அங்கிருந்து சென்றாள் கனகா.

அவள் மீண்டும் கருப்பையாவுடன் வரும்பொழுது தன் கணவன் புகைப்படம் பார்த்து ஏதேதோ புலம்பிக்கொண்டிருந்தாள் சரோஜா.

“இந்தாய்யா வேல முடிஞ்சா போதும்னு வந்துறாத... புள்ளைய ஆசுப்பத்திரிக்கு இட்டுக்கினு போகணும்.”

“இந்த கருப்பையாவ யாருனு நினைச்ச... அதெல்லாம் தொழில் சுத்தமா இருப்பேன்... மீசக்காரரு பங்களாக்குள்ள சரோஜா போய்ட்டு வார வரைக்கும் நானே புள்ளைய பாத்துக்கிறேன்... வந்ததும் ஆசுபத்திரிக்கு கூட்டிக்கினு போயிட்டு மறுக்கா இங்கயே இட்டாந்து வுட்ருறேன்... சரிதானமே..” கருப்பையா கூற.... “சரிதான்...” என அவனுக்குப் பதில் சொல்லிவிட்டு, சரோஜாவைப் பார்த்து “சரி நீ பாத்து போய்ட்டு வாமே” என்றாள் கனகா.

கண்ணீருடனும் குழந்தையுடனும் சரோஜா, கருப்பையா சைக்கிளில் அமர, கருப்பையா பங்களா மீசைக்காரர் வீட்டை நோக்கி பெடலை மிதித்தான்.

சரோஜாவின் எண்ணம் மாறலாம்; கருப்பையா பிள்ளையின் மருத்துவச் செலவுக்குப் பணம் கொடுத்து சரோஜாவின் முடிவை மாற்றலாம்; சரோஜாவின் நிலை அறிந்து மீசைக்காரர் கூட மனம் மாறி மருத்துவத்துக்கு உதவலாம். இதில் எதுவும் நடக்கலாம்... அது காலத்தின் கையில்.



# நிஸ்வாவின் நிழலில் பகுதி – 11: கடல் பிரசவித்த குகையும், மலையும்!!!

-இளங்கோ ராமசாமி, ஓமான்



கடந்த அத்தியாயத்தில் 'தனுஃப்' நகரின் சிதிலங்களுக்கிடையே நின்று பகையின் தழும்புகளைத் தடவிப் பார்த்தோமல்லவா? அந்த வரலாற்று நினைவுகளில் மூழ்கியதால் நிகழ்காலக் குறிப்பொன்றைச் சொல்ல மறந்து விட்டேன்.

நல்ல மழை பொழிந்து ஓய்ந்தால் போதும் நிஸ்வாவைச் சுற்றியிருக்கும் மக்கள் வாதி தனுஃபை நோக்கிப் படையெடுக்கத் துவங்கி விடுவர். சிறிது சிறிதாகக் கொட்டும் செயற்கை அருவிகளில் தலையைக் கொடுத்துக் கும்மாளமிடுவதற்காகக் குஞ்சு குளுவான்களை அள்ளிப் போட்டுக் கொண்டு பெரிய பெரிய 4 x 4 கார்கள் வாதி தனுஃபின் நீரோடையைக் கடந்து மறுபுறம் செல்லுவதைப் பார்க்கக் கண் கொள்ளாக் கட்சியாக இருக்கும்.

நீரோடையில் இருந்து 500 மீட்டர் தொலைவில் ஒரு தடுப்பணை இருக்கிறது. அந்த அணை நிரம்பி உபரி நீர் பெருக்கெடுத்து ஃபலஜின் வழி ஓட ஃபலஜின் சுவர்களில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள திறப்புகள் வழியும், உபரி நீர் வெளியேறுவதற்காகப் பதிக்கப்பட்டுள்ள குழாய்கள் வழியும் திடுதிடுவென குளிர்ந்த தூய நீர் கொட்டும். கோடை மழைக்குப் பிந்தைய சில நாட்கள் பாலை வெம்மையில் காய்ந்து கிடக்கும் மக்களுக்கு வருண பகவான் பெரிய மனது பண்ணி சொர்க்கத்தைக் காட்டும் அபூர்வ தினங்கள்.

அதனால் நீங்கள் நிஸ்வாவிற்குக் கிளம்புவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு எதற்கும் மழைத் தேவனுக்குப் பொங்கல் வைத்து ஒரு படையலைப் போட்டு விடுங்கள். அவன் மனம் குளிர்த்தால்

உங்கள் உடல் குளிரக் குளிரக் குளித்துக் களிக்கலாம்.

அப்படிக் கிளம்ப மனமின்றிக் குதியாட்டம் போட்டுக் கொண்டிருக்கும் உங்களைப் படாத பாடுபட்டுக் கிளப்பி அருகே இருக்கும் “அல் ஹூத்தா” என்ற குகைக்கு அழைத்துச் செல்வதே இன்றைய திட்டம். அங்கு போய்ச் சேர இருபது நிமிடங்களாவது பிடிக்கும். அந்தக் குகைக்குள் செல்ல அனுமதிச் சீட்டு வாங்க வேண்டும்.


இணையதளத்தில் முன்பதிவு செய்து விட்டுப் போவது உசிதம். இப்போது அந்தக் குகையை ஓம்ரான் (Omran) என்ற நிறுவனம் நிர்வகிக்கிறது.

“அல் ஹூத்தா” என்பதற்கு “வழிகாட்டி” என்றர்த்தம். 1960-களில் “ஹம்ரா”வில் இருந்து “ஷரஃப் அல் மேயன்” அல்லது “ஜபல் ஹராத்” என்றழைக்கப்படும் மலையுச்சியைத் தேடி வளைந்து நெளிந்து செல்லும் ஒரு அழகிய சாலையின் இடது புறத்தில் சமத்துப் பிள்ளையாக அமர்ந்திருக்கும் ஒரு குக்கிராமம் “அல் ஹூத்தா”. அந்தக் கிராமத்தை ஒட்டியுள்ள இரு மலைகளுக்கிடையே இறங்கினால் மிகப்பெரியதொரு கருந்துளையைக் காண முடியும்.

பழங்காலத்தில் வழி தவறிப் போன ஆட்டுக் குட்டியைத் தேடிப் போன மேய்ப்பனின் கண்ணில் அப்பெருந் திறப்பு தட்டுப்பட்டிருக்கிறது. அந்த ஆட்டுக் குட்டியின் நினைவாகவே அக் குகை “அல் ஹூத்தா” என்ற பெயரைப் பெற்றதாக ஒரு தொன்மம் உலவுகிறது.

அந்தக் கிராமத்தின் மலை முகடுகளிடையே துவங்கும் இந்தப் பெரும் குகை சுமார் ஐந்து கிலோ மீட்டர்கள் நீளமுடையது. உள்ளே மூன்று நீர்க் குளங்கள் இருக்கின்றன. அவற்றில் மிகப் பெரியது குகையின் மறுபுற வாயிலில் இருப்பதே. அது சுமார் 800 மீட்டர் நீளமும் 10 மீட்டர் அகலமும் 15 முதல் இருபது மீட்டர் ஆழமுமுடையது. அந்தக் குளத்தின் கரைவரை மறுபுறத்தில் இருந்து வழிகாட்டிகளது துணையோடு சுற்றுலாப் பயணிகள் வந்து பார்வையிடத் தேவையான வசதிகளை ‘ஓம்ரான்’ என்ற நிறுவனம் செய்து கொடுத்திருக்கிறது.

அந்தக் குளத்தின் மறுபுறம் இருக்கும் 500 - 800 மீட்டர் குகையை ஓமானி அரசு 2006-ஆம் ஆண்டு பொதுமக்கள் பார்வைக்குத் திறந்து விட்டது. அனுமதிச் சீட்டைப் பெற்றுக் கொண்டு சுமார் அரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ள குகையின் வாயில்



வரை பொம்மை ரயிலில் பயணிப்பது ஓமானுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளைக் குழந்தைகளாக்கும் ஒரு தனித்த அனுபவம். 2012-ஆம் ஆண்டு பாராமரிப்புப் பணிகளுக்காக மூடப்பட்ட குகை ஒரு சிறு அருங்காட்சியகம், இணையதள அனுமதிச்சீட்டு முன்பதிவு எனப் புதிய வசதிகளுடன் 2016-ஆம் ஆண்டு மீண்டும் திறக்கப்பட்டது.

அப்பெரும் குகைக்குள், மஞ்சள் வண்ண ஒளியில் குளித்துக் கொண்டிருக்கும் படிகளும், கைப்பிடிகள் பொருத்தப்பட்ட பாதுகாப்பான பாதையும் உண்டு.

குகையின் கூரையில் இருந்து கூரான கத்திகளைப் போலத் தொங்கும் சுண்ணாம்புப் பாறைகளாலான (Limestone அல்லது Calcium carbonate) “ஸ்டாலக் டைட்டுகளையும்” (Stalactites) தரையில் இருந்து மேலெழுந்து நிற்கும் சற்றே தடிமனான “ஸ்டாலக்மைட்டுகளையும்” (Stalagmites) அச்சுவர்களில் மடிப்பு மடிப்பாகக் காணப்படும் திரைச்சீலை போன்ற பாறைகளையும் காண்போரது விழிகள் ஆச்சரியத்தில் விரிவது உறுதி. இக்குகைக்குள் நிழற்படம் எடுக்க அனுமதி கிடையாது.



மொத்த குகையும் கிட்டத்தட்ட 5 கிலோ மீட்டர் நீளமுடையதெனினும் பார்வையாளர்கள் 850 மீட்டர்கள் வரை மட்டுமே அனுமதிக்கப் படுகின்றனர். குகையின் மிகப்பெரிய மண்டபம் போன்ற பகுதி 150 மீட்டர் நீளமும் 65 மீட்டர் உயரமும் கொண்டது.

இங்கு உலகில் வேறு எங்கும் காண முடியாத கண்களற்ற, இளஞ்சிவப்பு நிறமுமம், ஒளி ஊடுறுவக் கூடிய உடலும் கொண்ட அதிசய மீன் இனம் வாழ்கிறது. உள்ளே பல அரிய வகை சிலந்திகளும், நீண்ட வால் கொண்ட வௌவால் இனமும் வாழ்கின்றன.

இரு பெரும் திறப்புகள் இருப்பதால் காற்றோட்டமாக இருக்கும் இந்தக் குகை கடும் கோடையிலும் குளிர்ச்சியாகவே இருக்கும் என்பதால் இதனை வருடத்தின் எந்தப் பருவத்திலும் கண்டு ரசிக்கலாம்.


நான் இதுவரை ஐந்து முறை “அல் ஹூத்தா குகைக்குள் சென்று வந்திருக்கிறேன். மூன்று முறை முன்வாசல் வழியே வழமையான சுற்றுலாப் பயணிகளோடும் இரு முறை குகையின் துவக்கப் புள்ளியான "அல் ஹீத்தா" கிராமத்தில் இருக்கும் வாயிலினுள் கயிறு கட்டி இறங்கி நடந்தும், தவழ்ந்தும், ஏறியும், குதித்தும், நீந்தியும் குகையின் மறுபுறத் திறப்பை அடைய முயற்சித்திருக்கிறேன்.

இரண்டாவது முறை எங்கள் குழு கிட்டத்தட்ட குகையின் மறுபுறத்தை அடைந்து விட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக எங்களிடம் இருந்த விளக்குகளின் மின் கலன்கள் தங்கள் திறனை இழந்து விட்டதால் தோல்வியுடன் திரும்ப வேண்டியதாயிற்று. இப்போது முன்புற வாசல் வழி எவர் வேண்டுமானாலும் குகைக்குள் இறங்கலாம் என்ற நிலை மாறி "ஓம்ரான்" நிறுவன வழிகாட்டிகளது துணையுடன் மட்டுமே அக்குகையின் முழு நீளத்தைக் கடக்க முடியும் என்ற புதிய விதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்தக் குகையினுள் ஒரு புறம் இறங்கி மறுபுறம் வெளியேறும் நாளுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

இந்த “அல் ஹூத்தா” குகையின் அருங்காட்சியகத்தைப் பார்வையிட்ட போது மிக முக்கியமானதொரு புவியியல் உண்மையை அறிந்து கொண்டேன். உண்மையில் அது தான் இந்த அத்தியாயத்தின் ஹைலைட்டே.

ஓமான் உலகின் அதிசய பூமி. குறிப்பாக ஓமானின் ‘ஹஜர்’ மலைத் தொடர் போன்ற புவியியல் அமைப்பு உலகில் வேறெங்கும் கிடையாது. நிலப்பரப்பாக ‘ஓமான்’ உருவான புவியியல் வரலாறு ஒரு பேரதிசயம்.

உலகில் உள்ள மற்றனைத்து மலைத்தொடர்களும் புவித் தட்டுகள் அல்லது புவியோட்டுத் தட்டுகள்





என்றழைக்கப்படும் இரு ‘டெக்டானிக் ப்ளேட்டுகள்’ (Tectonic Plates) மோதிக் கொண்ட போது மேல் நோக்கி உந்தித் தள்ளப்பட்ட பூமியின் மேண்டில் (Mantle) எனப்பட்ட பகுதியால் ஆனவை. அதாவது இரண்டு தட்டுகள் ஒன்றுடன் ஒன்று மோதும் போது ஒன்று மற்றதன் அடியில் செருகி கீழே செல்லும். மோதலால் ஏற்படும் அழுத்தத்தின் காரணமாக கீழே செல்லும் தட்டின் மேற்புறத்தில் உள்ள ‘கண்ட ஓடு” (Continental Crust) உந்தித் தள்ளப்படும் ஒரு தடிமனான தரைவிரிப்பு மடிப்புகளாக மேலெழுவதைப் போல மலைத்தொடர்களாக உருவெடுக்கின்றது.

குறிப்பாக, இது 'குவியும் தட்டு எல்லைகளில்' (Convergent plate boundaries) நிகழ்கிறது. அங்கு ஏற்படும் மிதமிஞ்சிய அழுத்தமானது, தட்டுகளின் ஓரங்களை மடியவும், நெரியவும் மற்றும் தடிமனாகவும் செய்கிறது.

பூமியின் மேலடுக்கான புவி ஓடு (Crust/Lithosphere) மேல்நோக்கி மடிகிறது. இதனை இரண்டு கார்கள் நேருக்கு நேர் மோதுவதாகக் கற்பனை செய்து பாருங்கள்; மோதலின் போது கார்களின் உலோகம் எப்படி நசுங்கி மேல்நோக்கி எழும்புகிறதோ, அதேபோலவே கண்ட ஓடுகளும் ஒன்றின் மேல் ஒன்று அழுத்தி மடிந்து மலைத்தொடர்களை உருவாக்குகின்றன. உதாரணமாக, இந்தியத் தட்டும் (Indian Plate) யூரேசியத் தட்டும் (Eurasian Plate) மோதிக்கொண்டதால் உருவான இமய மலையைச் சுட்டலாம்.

கண்ட ஓடுகள் பூமியின் மற்ற அடுக்குகளை விட ஒப்பீட்டளவில் எடை குறைவானவை (Light/Buoyant). எனவே, அவை பூமியின் ஆழமான 'மேண்டில்' (Mantle) பகுதிக்குள் அமிழ்ந்து போவதை விட, மேல்நோக்கித் தள்ளப்பட்டு மலைகளாக உயர்கின்றன. இப்படிப் புவித்தட்டு கீழிறங்குவதால் மலைத்தொடர்கள் உருவாகும் முறைக்கு “சப்டக்க்ஷன்” (Subduction) என்று பெயர். ஓமானின் “ஹஜர்” மலைத் தொடரைத் தவிர மீதமுள்ள உலகின் அனைத்து மலைத்தொடர்களும் "சப்டக்க்ஷன்” என்ற முறையில் உருவானவையே. ஆனால் ஓமானின் ஹஜர் மலைத் தொடர் ஒரு புவியியல் பேரதிசயம். (Geological Wonder). ‘அப்டக்க்ஷன்’ (Obduction) என்ற ஒரு தனித்துவமான முறையில் இம்மலைத் தொடர் உருவான விதத்தை நான்கு படி நிலைகளாகப் பிரிக்கலாம்.

**முதல் நிலை: அமைதியான கார்பனேட் தளம்.**


25 முதல் 10 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இன்றைய ஓமானின் நிலப்பரப்பு கடலுக்கு அடியில் அரேபிய புவித்தட்டின் ஓரத்தில் இருந்தது. இந்த காலகட்டத்தில் ஓமான் ஒரு அமைதியான, ஆழமற்ற கடல் பகுதியாக இருந்தது. அப்போதுதான் சுண்ணாம்புப் பாறைகள் உருவாகத் தொடங்கின. பல கோடி ஆண்டுகளாகக் கடலின் ஆழத்தில் வாழ்ந்து மடிந்த உயிரினங்கள் பெரும் சுண்ணாம்புப் (Lime stone) படிமப் பாறைகளாக உருவாகின. இதனால் தான் இன்றும் ஓமானின் 3000 மீட்டர் உயரம் கொண்ட மலைச் சிகரங்களில் நடக்கும் போதும் ஏராளமான கடற்படிமங்களை எந்தப் பிரயத்தனமும் இன்றி மிக எளிதாகக் கண்ணுற முடிகிறது.

**இரண்டாம் நிலை: ஓபியோலைட் பிறப்பு**

ஒன்பதரை கோடி ஆண்டுகளுக்கு முன்பு (9.5 million years) நியோ-டெதிஸ் (Neo-Tethys) கடலின் ஆழத்தில், ஒரு எரிமலைத் தொடர் புதிய கடலடித் தரையை உருவாக்கிக் கொண்டிருந்தது. புவித்தட்டு நகர்வுகளால் (Tectonic shifts), கடலடி ஓட்டில் ஒரு பிரம்மாண்டமான விரிசல் ஏற்பட்டது. 'சமைல் ஓபியோலைட்' (Samail Ophiolite) எனப்படும் அந்த கடலடி ஓட்டின் ஒரு பெரும் பகுதி மெதுவாகப் பிரியத் தொடங்கியது. இங்கு “சமைல்” எனக் குறிப்பிடப் படுவது மஸ்கட்டில் இருந்து நிஸ்வா செல்லும் வழியில் உள்ள "சமைல்” என்ற அந்த நிலப்பரப்பின் பெயரே. ஆனால் "சமைல் ஓபியோலைட்” என்பது இன்றிருக்கும் ஒரு சிற்றூர் அல்ல. அது ஒரு 10,000 சதுர கிலோ மீட்டர்கள் பரப்பரளவும் 15 முதல் 20 கிலோமீட்டர் தடிமனும் கொண்ட ஒரு பிரமாண்ட பாறை அடுக்கு.

**மூன்றாம் நிலை: பிரம்மாண்டமான மேல்தள்ளல்**

ஏழெட்டுக் கோடி (80 – 70 மில்லியன்) ஆண்டுகளுக்கு முன்பு அரேபிய தட்டு யூரேசியாவை நோக்கி நகர்ந்தபோது, அது கடலடித் தரையில் "தடுமாறி விழுந்தது" போல ஆனது. வழக்கமாக கடலடித் தரை கீழே மூழ்குவதற்குப் (Subduction) பதிலாக, அதன் ஒரு பெரும் பகுதி அரேபியக் கண்டத்தின் மேல் பலவந்தமாகத் தள்ளப்பட்டது. கடலின் அடியாழத்தில் இருந்து அல்லேக்காக சிந்தாமல், சிதறாமல், நசுங்காமல், பிதுங்காமல் துண்டாக வெட்டியெடுத்துத் தட்டின் மேல் வைக்கப்பட்ட கசாட்டா ஐஸ்கிரீமைப் போல "சமைல் ஓபியலைட்” மேலெழுந்த இந்த




இயற்கைப் பேரதிசயம் “அப்டக்க்ஷன்” என்றழைக்கப் படுகிறது.

கடல் பாறைகளின் மிதமிஞ்சிய எடையால் கண்ட ஓடு (Continental crust) கீழே அழுத்தப்பட்டது. இது ஒரு ஆழமான பள்ளத்தை (Foreland basin) உருவாக்கியது. இந்த பள்ளத்தில்தான் இன்று ஓமனில் உள்ள எண்ணெய் மற்றும் எரிவாயு படிமங்கள் காலப்போக்கில் உருவாகின.

மஸ்கட்டைச் சுற்றியுள்ள அல்லது நிஸ்வா செல்லும் வழியில் நாம் காணக் கூடிய அந்த இருண்ட, கரடுமுரடான, "துரு" நிற மலைகள்தான் இவை. “ஓபியோலைட்” என்ற இவை உண்மையில் பூமியின் மேண்டில் (Mantle) மற்றும் ஆழ்கடல் தரைப்பகுதியாகத் தவம் புரிந்து கொண்டு கிடந்த துண்டுகள். ஆனால் இப்போது நிலத்தின் மேற்பரப்பில் கம்பீரமாக அமர்ந்திருக்கின்றன.

**நான்காம் நிலை: இறுதிக்கட்ட எழுச்சி**

இரண்டு அல்லது மூன்று கோடி (30 – 20 மில்லியன்) ஆண்டுகளுக்கு முன்பு இந்த மலைகள் தலை நிமிரத் துவங்கின. அரேபியத் தட்டு இறுதியாக யூரேசியாவுடன் மோதியபோது (இதுவே ஈரானில் சாக்ரோஸ் மலைகளை உருவாக்கியது), இரண்டாவது கட்ட புவித்தட்டு விசை உருவானது.

மடிப்பு (The Folding): இந்த மோதலானது ஒரு பெரிய தரைவிரிப்பை (Rug) சுவரை நோக்கித் தள்ளுவது போல இருந்தது. சமதளமாக இருந்த சுண்ணாம்புப் பாறை (Limestone) அடுக்குகளும் ஓபியோலைட் பாறைகளும் நெரிந்து மேல்நோக்கிக் குவிந்தன.

குவிமாடங்கள் (The Domes): இது ஜபல் அக்தர் (Jabal Akhdar) மற்றும் ஜபல் ஷம்ஸ் (Jabal Shams) போன்ற பிரம்மாண்டமான "குவிமாடங்களை" உருவாக்கியது. ஒரு காலத்தில் கடலின் அடிவாரத்தில் இருந்த சுண்ணாம்புப் பாறைகள், இந்த அழுத்தத்தால் 3,000 மீட்டர் உயரத்திற்கு வானை நோக்கித் தள்ளப்பட்டன.

விண்மீன்

முதன் முதலில் ஓமானுக்கு வந்து இறங்கியபோது கண்ணில் கண்ட பக்கமெல்லாம் விதவிதமான வண்ணங்களில் பல்வேறு உயரங்களில் மொட்டைப் பாறைகளாக செதில் செதிலாக மடிந்து கிடந்த மலைத் தொடர்கள் என்னை ஆச்சரியத்தில் மூழ்கடித்தன.

இமயம், ஆல்ப்ஸ் மற்றும் ஆண்டிஸ் போன்ற உலகின் பெரிய மலைத்தொடர்கள் காடுகளாலும், பனியாலும் நல்ல அடர்த்தியான மண்ணாலும் மூடப்பட்டிருக்கின்றன. இந்த மலைகளில் பாறை அடுக்குகளை அடைய வேண்டுமானால் புவியியல் ஆராய்ச்சியாளர்கள் நிலத்தைத் தோண்டியாக வேண்டும். ஆனால் “அல் ஹஜர்” மலைத் தொடர் மேற்குறிப்பிட்டதைப் போன்ற எந்த ஆடைகளையும் உடுத்திக் கொள்ளாமல் பிறந்த மேனியாய் மல்லாந்து கிடப்பதைக் காண முடியும். பல மைல்களுக்கு அப்பால் இருந்து பார்த்தால் கூட இம்மலைகளின மடிப்புகளும், அடுக்குகளும் வெறும் கண்களுக்கே புலப்படுகின்றன. இக்காரணத்தால் தான் சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் ஓமானை ஒரு திறந்த வெளிப் புவியியல் அருங்காட்சியகம் எனக் கொண்டாடுகின்றன.



இந்தத் தகவல்களையெல்லம் அறிந்து கொண்டு கொண்டு “அல் ஹூத்தா” குகைக்குள் இறங்கும் போது 25 கோடி ஆண்டுகளுக்கு முன்பு கடலுக்கடியில் கிடந்த ஒரு குகைக்குள் நடந்து கொண்டிருப்பதை நினைத்துப் பாருங்கள். அதே போல அங்கு நீங்கள் காணும் ‘ஸ்டாலக்டைட்’ மற்றும் ‘ஸ்டாலக்மைட்’டுகளின் நுனி முந்தாநாள் இரவு உருவானதாக இருக்கவும் வாய்ப்பிருக்கிறது. இந்தச் சுண்ணாம்புப் படிமப் பாறைகள் இன்றும் வளர்ந்து கொண்டுள்ளன.

உலகில் வேறு எங்கும் இவ்வளவு அகலமான கால, தேச இடைவெளியில் கால் பதித்துத் தொட்டுத் தடவிப்பார்த்து அலையும் வாய்ப்புக் கிட்டாதென நினைக்கிறேன். அதனால் தான் இதனை வாசித்துக் கொண்டிருக்கும் அனைவரும் வாய்ப்புக் கிடைக்கும் போது ஒரு முறை தவறாது நிஸ்வாவிற்கு வந்து சென்று விட வலியுறுத்தி விடை பெறுகிறேன்.

அடுத்த அத்தியாயத்தில் உங்கள் குடலை வாய்க்குக் கொண்டு வரக் கூடிய ஒரு திகிலான பயண அனுபவத்திற்குத் தயாராக இருக்கவும்.

# உழைப்பு

பல தடவைகள் தைக்கப்பட்ட அப்பாவின்
பழைய செருப்பு ஒரு நாள்
அறுந்து போனது தன் உழைப்புக்கு
முற்றுப்புள்ளி வைத்து விட்டு;
அப்பா மட்டும் உழைத்துக் கொண்டே
இருக்கிறார் வெற்றுக் கால்களுடன்

விண்மீன் மின்னிதழ்

# துணை

எதிர் வீட்டில் கைக்குழந்தை புதிய வரவு;
இரவின் மௌனத்துக்குப் புதிதாய் துணை வருகிறது
குழந்தையின் அழுகையும் தாயின் தாலாட்டும்

ப்ரஸன்னா வெங்கடேஷ்,
நவி மும்பை

# நீளிரா

பரிவை சே.குமார்




நீளிரா- ஒரு நீண்ட நெடிய இரவு.

போர் என்பது எவ்வளவு கொடுமையானது என்பதை சமீபத்திய ட்ரோன் தாக்குல்கள் மூலம் நாம் பார்த்திருக்கிறோம். அதுபோக உலகின் சில இடங்களில் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகும் மக்களையும், பசியோடு கையேந்தி நிற்கும் குழந்தைகளையும் செய்திகளில் பார்த்துக் கடந்து போகின்றோம். எப்பவுமே பாதிப்பு என்பது நமக்கு இல்லாதபோது நாம் அதைப் பற்றி அதிகம் யோசிப்பதுமில்லை, ரொம்ப வருந்துவதில்லை.

இலங்கையில் நடந்த போரும், அங்கு இந்திய ராணுவம் சென்று செய்த செயல்களும் பள்ளிக்காலத்தில் செய்திகளாக அறிந்தவைதான். அன்றைய போர்ச்சூழலில் அந்த மக்கள் எப்படி வாழ்ந்திருப்பார்கள்..? தினம் தினம் செத்துத் செத்து வாழும் வாழ்வு எப்படியானதாக இருந்திருக்கும்..? என்பதையெல்லாம் அந்த வயதில் நானெல்லாம் யோசித்ததே இல்லை. ஊருக்குப் பக்கத்தில் அகதிகள் முகாம் – இப்போதும் இருக்கிறது – வந்தபின் அந்த மக்களின் வாழ்வியல் வலிகளைக் கதைகளாய் கேட்டபோதுதான் போர் எத்தனை கொடுமையானது என்பதை உணர முடிந்தது.

ஒரு திருமண வீட்டில் திருமணத்துக்கு முந்தைய இரவில் மகிழ்வான நிகழ்வுகள் நடக்கலாம் ஆனால் ராணுவத்தின் பிடியில் அந்தக் குடும்பம் இருந்தால்... ஒவ்வொரு காட்சியையும் நாம் அடுத்து என்னாகுமோ எனப் பயந்தபடி பார்க்கும் வண்ணம் தான் பார்த்து வளர்ந்த வாழ்க்கையில் இருந்து ஒரு துளியை நம்முன்னே 'நீளிரா'வாக விரித்திருக்கும் இயக்குநர் சோமிதரன்.

திருமணம் செய்வதற்கு இந்திய ராணுவத்திடமும் இலங்கை ராணுவத்திடமும் அனுமதி பெற வேண்டும் என்பதே மிகக் கொடுமையான செயல். அப்படி அனுமதி வாங்கி திருமணம் செய்ய இருக்கும் வீட்டுக்குள் வேறு ஒரு இடத்துக்குச் செல்ல வேண்டிய சூழலில் மாறி வந்துவிடும் இந்திய ராணுவம், அவர்கள் வீட்டுக்குள் இருக்கிறார்கள் எனத் தெரிந்து வீட்டைச் சுற்றி வளைக்கும் விடுதலைப் புலிகள் என அந்த இரவை நீண்ட நெடிய இரவாக (நீளிரா) இறுதிவரை ஒரு பதட்டத்தோடு பார்க்கும்படி கொடுத்திருக்கிறார்கள்.

1988-ல் இலங்கையின் வடக்குப் பகுதியில் ஒரு கிராமத்து திருமண வீட்டில் நடக்கும் கதை இது. அந்த மக்களுக்கும் புலிகளுக்குமான உறவு படத்தின் ஆரம்பத்தில் காட்டப்படுகிறது. இயக்கத்துக்குப் போன மணப்பெண்ணின் அப்பா என்ன ஆனார்...? என்பது தெரியாமல் இருக்கும் குடும்பத்தில் பெண்ணின் தாத்தாவை வைத்துக் கொண்டு, மனநிலை பாதிக்கப்பட்ட மூத்த பெண்ணையும், வயிற்றுப் பிள்ளைக்காரியான நாத்தனார், இன்னும் சிலருடன் எப்படியும் மகளின் திருமணத்தை நல்லபடியாக முடித்து விடவேண்டுமென இரவெல்லாம் போராடும் மணப்பெண்ணின் தாயரைப் பார்க்கும் போது அந்த மக்களின் வலி நம்மை ஏதோ பண்ணுகிறது.

இராணுவத்துக்குத் தலைமை தாங்கும் நேர்மையான வீரராக நவீன் சந்திரா, தனது குழுவில் இருக்கும் ஒரு வீரர் எல்லை மீறும் போதெல்லாம் பொறுமையுடன் கையாள்கிறார். படத்தின் இறுதியில் அவர் எடுக்கும் முடிவு மிகச் சிறப்பு.

அதேபோல் புலிகளின் பக்கம் அந்தக் குழுவை வழிநடத்தும் சனத்தும், மகளின் திருமணம் பாதிக்கப்பட்டு விடக்கூடாதென எல்லாவற்றுக்கும் தானே பதில் சொல்லிக் கொண்டு குடும்பத்தைப் பாதுகாக்கத் துடிக்கும் குடும்பத் தலைவியாக கபிலா வேணு, படத்தில் திடீரென பயத்தையும் பதட்டத்தையும் உண்டாக்கி இறுதிக் காட்சிக்கு வலு சேர்க்கும் ரூபா கொடுவாயூர், மணப்பெண்ணாக மகிழ்வைச் சுமந்தாலும் வலியையும் சேர்ந்தே சுமக்கும் சிது குமரேசன், இராணுவ வீரரிடம் தான் யார் என்பதை நீண்ட வசனமாகப் பேசி, வலியைச் சொல்லும் பெரியவராக நமச்சிவாயம், அடாவடி இராணுவ வீரராக ரோஹித். இவர்களுடன் ‘கயல்’ வின்சென்ட், ஸ்வாதி கிருஷ்ணன், விது, நவயுகா குகராஜா என அனைவரும் தங்களது கதாபாத்திரத்துக்கு வலு சேர்த்திருக்கிறார்கள்.

துப்பாக்கி தூக்கி சண்டை இட்டு விளையாடும் குழந்தைகள், புலிகளைத் தேடி பொதுமக்களைத் தொந்தரவு செய்யும் இராணுவம், விஜயகாந்த் படங்கள், டெக்கில் படம் போடும் போது இடையில் ஒளிபரப்பாகும் இயக்கக் காட்சிகள், சின்னதாய் ஒரு காதல், இராணுவம் வீட்டின் முன்னே நிற்கிறது என்றதும் நாலைந்து சட்டைகளை எடுத்துப் போட்டுக் கொள்ளும் பெண் பிள்ளைகள் என படம் நம்மை அன்றைய இலங்கையின் சூழலுக்குள் இழுத்துச் செல்கிறது.



படத்தின் இறுதிக் காட்சி உண்மையில் ரொம்பவே உறைய வைத்துவிட்டது. அந்தத் திருமணம் நம்மைக் கலங்கச் செய்கிறது. இப்படித்தானே அந்த மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். இவர்களின் வலியைப் பார்த்த போது எனக்கு சுவிச்சர்லாந்தில் இருக்கும் இலங்கையைச் சேர்ந்த நிஷா அக்கா தனது 12 வயதில் தரைமார்க்கமாய் பெரும்பாலும் நடந்தே நாடு கடந்து வந்த கதையைச் சொன்னது ஞாபகத்தில் ஆடி வலியைக் கொடுத்தது.

செல்வரத்னம் பிரதீபனின் கேமராவும் கேயின் பின்னணி இசையும் இரவு நேரக் காட்சிகளை நம்மை பதட்டத்துடன் பார்க்க வைக்கிறது. ராதா ஸ்ரீதரின் படத் தொகுப்பும், சிவாவின் இசையில் வரும் பாடலும் படத்துக்கு மகுடம்.

கார்த்திக் சுப்புராஜ், கார்த்திகேயன் சந்தானத்தின் ஸ்டோன் பெஞ்ச் ஸ்டுடியோவும் நடிகர் ராணா டகுபதியின் ஸ்பிரிட் மீடியா நிறுவனமும் இணைந்து தாயாரித்திருக்கிறது.


வீரப்ப வேட்டையில் தமிழக, கர்நாடகா காவல்துறை என்ன செய்ததோ அதைத்தான் இலங்கை சென்ற இந்திய ராணுவமும் செய்தது என்பதை வசனங்கள் வழி சொல்லிச் சென்றாலும் இந்திய ராணுவ வீரர்கள் நடந்து கொண்ட விதத்தை, அவர்களுக்குள்ளும் மனிதாபிமானமுள்ள வீரர்கள் இருந்தார்கள் என்பதை மிகச் சிறப்பாக காட்சிவழி கடத்தியிருக்கிறார்கள்.

இந்தப் படத்தின் இயக்குநரான ஈழத்துப் படைப்பாளி சோமிதரன் ஒரு உண்மைக் கதையை உலகறியச் சொல்லியிருப்பதற்கு வாழ்த்துகள்.
நீளிரா மிகச் சிறப்பான படம்.

GALAXY BOOK
SELLERS & PUBLISHERS

WE BRING BOOKS TO HOME

WWW.GALAXYBS.COM



Whatsapp 9994434432